




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 149 குரோதி வருடம், தை மாதம் 03 ஆம் திகதி வியாழக்கிழமை
(16.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 15, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12






## வெலேசுதா உட்பட மூவருக்கு கடூழிய சிறைத்தண்டனை



பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரும் பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவருமான வெலேசுதா என அழைக்கப்படும் கம்பளை விதானகே சமந்த குமார உட்பட மூவருக்கு 08 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று புதன்கிழமை (15) உத்தரவிட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல்கள் மூலம் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துகளை...

» 02 பக்கம்

### அபிவிருத்தியின் புதிய யுகம்

# இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயார்



## அநுரவுடனான சந்திப்பில் சீன ஜனாதிபதி அறிவிப்பு

### புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்து

சீனாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (15) சீன மக்கள் மண்டபத்தில் நடைபெற்றது.

சீன மக்கள் மண்டபத்துக்கு சென்றிருந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அமோக வரவேற்பளித்தார். மரியாதை வேட்டுகளுடன் மிகுந்த கௌரவமான...

» 02 பக்கம்

### அரச ஔடதங்கள் கூட்டுத்தாபன

## தலைவருக்கு எதிராக முறைப்பாடு

பொருத்தமற்ற நிறுவனமொன்றுக்கு விலைமனுக்கோரல் ஒப்புதல் அளித்தமை தொடர்பில் விசாரணை செய்யுமாறு அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் மனோஜ் வீரசிங்கவுக்கு எதிராக தொழிற்சங்கக் கூட்டமைப்பு இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று(15) முறைப்பாடு செய்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் சுகாதார நிர்வாகத்தின் கீழ், அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தினூடாக பொருத்தமற்ற நிறுவனத்துக்கு விலைமனுக்கோரல் வழங்க முயற்சித்து வருகிறது. இதனூடாக 130 மில்லியன் ரூபா இலங்கை அரசுக்கு நட்டம் ஏற்படவுள்ளது. அதேபோன்று,...

» 02 பக்கம்

### மிருசுவில் கொலையாளிக்கு கோட்டா வழங்கிய மன்னிப்பு

# அடிப்படை மனித உரிமை மீறலாவென விசாரிக்க உயர்நீதிமன்றம் தீர்மானம்

» 02பக்கம்

### கமெண்ட் கந்தர்...



பொங்கல் தான் முடிஞ்சுது... சித்திரை புதுவருடத்துக்கு முன்னமாவது பச்சரிசி கிடைக்குமோ?



## நெல் - அரிசி விலைக்கான வர்த்தமானி விரைவில்

பெரும்போகத்தில் கிடைக்கும் அறுவடையை சதொச நிறுவனம் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை என்பவற்றினூடாக விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்ய அரசாங்கம்...

» 02 பக்கம்

### சட்டத்தரணிகள் சங்க

## தேர்தல் பெப்.19இல்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2025/2026ஆம் ஆண்டின் தலைவர் தெரிவுக்கான தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

2025/2026ஆம் ஆண்டின் தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளுக்கான வேட்புமனுக்கள் சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி விராஜ் தயாரத்னவால்...

» 02 பக்கம்

## புதிய முதலீடுகளை கொண்டுவருவோம்

### அமெ.தூதுவர் ஜூலி சங் அறிவிப்பு



இலங்கைக்கு தொடர்ந்தும் புதிய வர்த்தக முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க தான் உள்ளிட்ட தனது குழுவினர் தயாராக இருப்பதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

» 02பக்கம்

## மின் கட்டணத்தை 35 சதவீதம் குறைக்க

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு தொழிற்சங்கங்கள் அழுத்தம்



மின் கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதி முடிவு நாளை (17) அறிவிக்கப்படவுள்ள நிலையில், மின் கட்டணத்தை 35 சதவீதத்தால் குறைக்க...

» 02 பக்கம்

## 2026இல் புதிய சுகாதாரக்கொள்கை

### மக்களின் பங்களிப்புக்கு வாய்ப்பளிக்குமாறு மருத்துவ சங்கம் வலியுறுத்து

சுகாதாரத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் 2026ஆம் ஆண்டில் புதிய சுகாதாரக்கொள்கையை தயாரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மருத்துவச் சங்கம் தெரிவித்துள்ளது.


இதன்போது சுகாதாரத்துறையினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆறு விடயப்பரப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்...

» 02 பக்கம்

### உஷ்



ரணிலுக்கும் சஜித்துக்கும் இடையில் நடைபெற்று வரும் அரசியல் பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் அடுத்த உள்ளூராட்சித் தேர்தலில் இருவரும் ஒரு அணியில் களமிறங்கும் வாய்ப்பு பிரகாசமாகியுள்ளதாம். ஆனால், தொலைபேசி சின்னத்தில் புதிய அரசியல் கூட்டணி அமையவேண்டும் என்று சஜித் விடாப்பிடியாக நிற்பதால் சிறு இழுபறி ஏற்பட்டுள்ளதாக தகவல்.






## துறைமுக அதிகாரிகளின் காலதாமதத்தால் கொள்கலன்கள் தேக்கம்

துறைமுக வாஃப்அதிகாரிகள் மற்றும் போக்குவரத்து தரப்பினரின் காலதாமதம் காரணமாக துறைமுகத்தில் மீண்டும் கொள்கலன்கள் தேங்கியுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். எதிர்வரும் சில நாட்களில் பெரும் எண்ணிக்கையிலான கொள்கலன்களை இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய...

» 02 பக்கம்






» 03 பக்கம்





*சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, சீன மக்கள் மண்டபத்துக்கு சென்றபோது அந்நாட்டு ஜனாதிபதி சீ ஜின்பிங் அமோக வரவேற்பளித்தார்.*

# அரச நிலங்களை குத்தகைக்கு பெற்ற 23 பெருந்தோட்ட நிறுவனங்களின் ரூ.590 மில்லியன் வரி நிலுவையில்

## கணக்காய்வு அறிக்கையில் தகவல்

அரசாங்க நிலங்களை குத்தகைக்கு பெற்றுள்ள 23 பெருந்தோட்ட நிறுவனங்கள் 590 மில்லியன் ரூபா வரி செலுத்தத் தவறியுள்ளதாக தேசிய கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

அறிக்கையின்படி, மொத்தம் 2 இலட்சத்து 49ஆயிரத்து 843 ஹெக்டேயர் அரசுக்குச் சொந்தமான நிலம் இந்த 23 நிறுவனங்களுக்கு 53 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

குருநாகலை தளமாகக் கொண்ட ஒரு நிறுவனமொன்று 2023 டிசம்பர் 31திகதிவரை அரசாங்கத்துக்கு ரூ.320 மில்லியனுக்கும் அதிகமான வரி யை செலுத்த வேண்டியுள்ளது. இந்த தொகையில் ரூ. 160 மில்லியனுக்கும் அதிகமான தொகை ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையிலுள்ளது.

இந்த நிறுவனம் அதன் வருடாந்த வரிகளை குறைவாக செலுத்தியுள்ளதுடன், நிறுவனத்தின் நிகர சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே இவ்வாறு வரியை செலுத்த முடியாமைக்கான காரணமென குறித்த நிறுவனம் கூறியுள்ளது.

பெருந்தோட்ட அமைச்சு தொடர்பான தேசிய கணக்காய்வு அறிக்கையில் இந்த நிறுவனம் போன்று மேலும் பல நிறுவனங்கள் அரசுக்கு வரியை செலுத்துவதில் காலம் தாழ்த்தி வருவதாக தெரியவந்துள்ளது.

# ஆசிரியர் சேவை ஆட்சேர்ப்புப் போட்டி பரீட்சைக்கான நேர்முகத் தேர்வு

## எவருக்கும் அநீதி ஏற்படாத வகையில் நடத்த கிழக்கு ஆளுநர் பணிப்பு

*(கிண்ணியா நிருபர்)*



கிழக்கு மாகாண ஆசிரியர் சேவை ஆட்சேர்ப்புப் போட்டி பரீட்சைக்கான நேர்முகப் பரீட்சைகளை இன்றும் (16), நாளையும் (17), நாளை மறுதினமும் (18) நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் மூன்று நேர்முகப்பரீட்சை சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று (15) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர மற்றும் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.நிகழ்வில் பேசிய ஆளுநர், எந்தவொரு தரப்பினருக்கும் அநீதி ஏற்படாத வகையில் ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சையை நடத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

## அரச ஔடதங்கள் ...

பொருத்தமற்ற நிறுவனம் என்று அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்பட்ட நிறுவனத்துக்கே இந்த கொள்முதல் நடவடிக்கைகளை வழங்கியுள்ளதாக தொழிற்சங்க கூட்டமைப்பின் பேச்சாளரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “இதனை தொழில்நுட்ப ரீதியாக உறுதிப்படுத்தி அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் மனோஜ் வீரசிங்க ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதனூடாக பொருத்தமற்ற நிறுவனமொன்றுக்கு கடந்த டிசம்பர் மாதத்தில் விலைமனு கோரலொன்றை வழங்கியதாக கூறியுள்ளார். அதே ஊடக அறிக்கையில் பின்னர் அந்த விலைமனு கோரலை இரத்துச்செய்துவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், அந்த காரணம் எங்களுக்கு அவசியமற்றதாகும். எனவே, ஔடத கூட்டுத்தாபனத்தில் இதுபோன்ற விலைமனுகோரல் மோசடி இடம்பெற்றமை குறித்து ஊடக அறிக்கை வெளியிடுவதால் மாத்திரமே நிவர்த்தி செய்ய முடியாது. பொருத்தமற்ற நிறுவனமொன்றுக்கு இந்த விலைமனுகோரலை வழங்கும்போது அந்த நிறுவனத்திடம் ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரமோ அல்லது சுகாதார ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமோ அவர்களிடம் இருக்க வில்லை என்பது கொள்முதல் குழுவின் அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இடம்பெறவிருந்த மோசடியை மூடிமறைக்க அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் முயற்சிப்பாராக இருந்தால் அது பொருத்தமற்றதாகும்.

எனவே, இந்த விலைமனுகோரலினால் அரசாங்கத்துக்கு ஏற்படவிருந்த நட்டம் தொடர்பிலும் குறித்த கொள்முதல் பொறிமுறை தொடர்பிலும் அதனுடன் தொடர்புடைய சகல கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மனோஜ் வீரசிங்கவினால் வெளியிட்ட ஊடக அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, அவரிடம் விசாரணைகளை முன்னெடுக்குமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம்” - என்றார்.

## துறைமுக...

பிரதி அமைச்சருடன் நேற்று (15) கலந்துரையா டப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடலில் சுங்கம், துறைமுக அதிகார சபை, கொள்கலன் விடுவிப்பு பிரி வு போக்குவரத்து பிரி வு ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். இதன்போதே அதிகாரி கள் இதனை தெரி வித்துள்ளனர். அதற்கமைய, ஜனாதிபதியின் ஆலோசனைக கமைய இந்த செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும் ஜனாதிபதி அறிவிப்பின் பின்னர் ஏற்பட்ட தொடர் விடுமுறையின் காரணமாக மீண்டும் துறைமுகத்தில் கொள்கலன்கள் தேங்கியுள்ளதாக அகில இலங்கை கொள்கலன் போக்குவரத்து வாகன உரி மையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுல இந்த கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

## அபிவிருத்தியின்...

முறையில் வரவேற்பு நிகழ்வு செய்யப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து இருதரப்பு அரச தலைவர்களுக்கும் இடையில் சுமுகமான கலந்துரையாடல் நடைபெற்றதோடு, அடுத்து இருதரப்பு கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அபிவிருத்தியின் புதிய யுகத்துக்காக இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அத்தோடு நெருங்கிய நட்பு நாடுகள் என்ற வகையில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவு கூர்ந்த சீன ஜனாதிபதி சீ ஜிங்பிங், எதிர்காலத்தில் இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார, சமூக மற்றும் கைத்தொழில்துறை சார்ந்த பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத் திடப்பட்டன.

இந்த சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அரச தகவல் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே. பண்டார ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

## 2026 இல் புதிய...

என்பதுடன் அரசாங்கத்தால் முன்வைக்கப் படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதாரத் துறைக்கு அதிக ஒதுக்கீட்டை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுரந்த பெரேரா தெரி வித்தார். இதுதொடர்பில் கொழும்பில் நேற்று (15) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

2015ஆம் ஆண்டின் பின்னர் 2026ஆம் ஆண்டில் புதிய சுகாதாரக் கொள்கையை தயாரி க்க வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கொள்கைத் தயாரி ப்புகளை இந்த வருடத்தில் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். வாழ்க்கை வட்டத்தினூடாக மக்களை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த செயற்பாடுகளின்போது எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

சுகாதாரத்துறையில் புதிதாக இணைந்து கொண்டுள்ள பல்வேறு விடயங்கள் இருக்கின்றன. செயற்கை நுண்ணறிவு, சூழலியல் மாற்றம் என்பன சுகாதாரத் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். சுகாதாரக் கொள்கைகளை தயாரி க்கும்போது எவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்பது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் விளக்கமளித்துள்ளது. 06 பிரி வுகளை உலக சுகாதார ஸ்தாபனம் பெயரி ட்டுள்ளது. சுகாதாரத்துறையின் விநியோகம், சுகாதாரத்துக்கான முதலீடு, நிதி ஒதுக்கீடு, மனிதவள முகாமைத்துவம், சுகாதார உபகரணங்கள், கட்டடங்களை உருவாக்குதல், தரவு சேகரி ப்பு என்பற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று பரி ந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கு அப்பால் பொது மக்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும். சுகாதாரக் கொள்கை உருவாக்கத்தில் மக்களும் பங்களிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்நிலையில், இன்னும் சில வாரங்களில் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. அதன்போது சுகாதாரத்துறைக்கான நிதி ஒதுக்கீடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆரம்பக்கட்ட சுகாதாரத்துக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியை அதிகரி க்க வேண்டும். அதேபோன்று ஒருசில நோய்களுக்கான சிகிச்சை ஒதுக்கீட்டையும் அதிகரி க்க வேண்டும். சிறுவர்களின் விருத்தி, போசணை மட்டம், மூளை வளர்ச்சி உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். வறுமையின் மத்தியில் வாழும் சிறுவர்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டியதும் அவசியமாகும் என்றார்.

## மின் கட்டணத்தை...

பொதுப் பயன்பாடுகள் அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொழிற்சங்கங்கள் கோரிக்கை முன்வைத்துள்ளன. அவ்வாறு இல்லாவிட்டால், மின் கட்டண குறைப்பைக் கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க நேரிடுமென்றும் தொழிற்சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

அதற்கமைய, கடந்த சில நாட்களாக பொதுப்பயன்பாடுகள் அதிகார சபை ஒன்பது மாகாணங்களிலும் பொதுமக்களிடம் கருத்துக் கணிப்புகளை நடத்தியிருந்தது. அதன்போது, பிரதானமாக மின் கட்டணத்தை 20 – 35 சதவீதத்துக்கு இடையில் குறைக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்காக சகலரும் ஒன்றுபட்டிருந்தார்கள் என்று மின்சாரம் பயன்படுத்துவோர் சங்கத்தின் தலைவர் எம்.டி.ஆர். அத்துல தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

‘‘மக்களின் யோசனைகளுக்கு மதிப்பளித்து 35 சதவீத மின் கட்டண குறைப்பை மேற்கொள்ள பொதுப் பயன்பாடுகள் அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மின் கட்டணத்தை 36 வீதத்தால் உயர்த்துமாறு கூறியதை கேட்டுக்கொண்டு அமைதியாக இருக்கக் கூடாது. மின்சார சபை நூற்றுக்கு ஒரு வீதம் என்று கூறுகிறது என்றால் அதனை கேட்டுவிட்டு அமைதியாக இருந்துவிடவும் கூடாது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீன நிறுவனமாகும். அதேபோன்று எரிபொருள் விலை மின் கட்டணத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதிக விலையிலேயே எரிபொருள் கூட்டுத்தாபனம் எரிபொருளை விநியோகித்து வருகிறது. டீசல், நெப்தா போன்றவற்றை அதிக விலைக்கே விநியோகிக்கிறது. இதனூடாக எரிபொருள் கூட்டுத்தாபனம் அதிக இலாபத்தையும் அடைகிறது. குறைந்தபட்ச செலவில் எரிபொருளை பெற்றுக்கொடுத்தால் மின்சார சபையினால் அதிக இலாபத்தை அடைய முடியும்’’ என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, 17ஆம் திகதி மின் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. வரலாற்றில் அதிக வீதத்தில் மின் கட்டணம் குறைக்கப் படவேண்டும். கடந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்ட வரி முறையை அவ்வாறே முன்னெடுத்து மக்களின் பணத்தை சூறையாடும் நடவடிக்கையை கிளீன் ஸ்ரீ லங்கா என்று கூறுகிறார்கள். இதற்கு அப்பால் மின் கட்டணத்தை குறைப்பதே இந்த அரசாங்கத்தின் பிரதான கடமையாகும் என்று ஐக்கிய தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் ஆனந்த பாலித்த தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

‘‘எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் இரண்டு முறைகளின் அடிப்படையில் 33 சதவீதத்துக்கும் அதிகமான அளவில் மின் கட்டணத்தை குறைக்க முடியும். ஒரு வருடத்துக்குமேல் மின்சார சபைக்கு கிடைத்த இலாபத்தின் அடிப்படையிலும் ஊழல் நிறைந்த எரிபொருள் விலை சூத்திரத்தை திருத்தி அதனை மின்சார சபைக்கு வழங்குவதனூடாகவும் மின்கட்டணத்தை குறைக்க முடியும். காரணம் தற்போது எரிபொருள் கூட்டுத்தாபனத்தால் மின்சார சபைக்கு வழங்கப்படும் எரிபொருள் குறைந்த விலையிலேயே வழங்கப்படுகிறது. எனவே, இந்த முறையினூடாக நாளையிலிருந்து மின் கட்டணத்தை நிச்சயமாக 35 சதவீதத்தால் குறைக்க முடியும். இதனை சூறையாடுவதற்கான உரி மை அநுர - ஹரிணி அரசாங்கத்துக்கு இல்லை. தற்போது நடைமுறையிலுள்ள மின்கட்டண சூத்திரத்தை திருத்தியமைக்க வேண்டும். அவ்வாறு 35 சதவீதத்தால் மின் கட்டணத்தை குறைக்காவிட்டால் கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்துக்கு எதிராக ஒன்றுதிரள நேரிடும். மக்களையும் ஒன்றுதிரட்ட நேரிடும்’’ என்றார்.

## நெல்...

திட்டமிட்டுள்ளதாகவும் நெல்லுக்கான உத்தரவாத விலையையும் அரிசிக்கான நிர்ணய விலையையும் விரைவில் வர்த்தமானியில் வெளியிடவுள்ளதாகவும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரி வித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று (15) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

சதொச நிறுவனம் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை என்பவற்றினூடாக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளோம். பெரும் எண்ணிக்கையிலான நெற் களஞ்சியங்கள் சேதமடைந்த நிலைமையிலேயே இருக்கின்றன. அவற்றை நெல் களஞ்சியப்படுத்துவதற்கு பொருத்தமான நிலைமைக்கு கொண்டுவரவும் கிளீன் ஸ்ரீ லங்காவினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்த நடவடிக்கைகளை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

விவசாயிகளுக்கும் அநீதி ஏற்படாத வகையிலும் நுகர்வோருக்கும் அநீதி ஏற்படாத வகையிலும் நிர்ணய விலையை தீர்மானிக்க வேண்டியுள்ளது. தற்போது ஒருகிலோ அரி சி 230 – 240 ரூபாவுக்கும் இடையில் விற்பனை செய்யப்படுகிறது. இதனைவிட அரி சி விலை அதிகரி ப்பதற்கு இடமளிக்க முடியாது. விவசாயிகளுக்கும் அதற்கு ஏற்ற விலை நிர்ணயிக்கப்படும். இந்த விடயங்கள் தொடர்பில் நன்கு ஆராய்ந்து நெல்லுக்கு உத்தரவாத விலையையும் அரிசிக்கு நிர்ணய விலையையும் விரைவில் அரச வர்த்தமானியில் வெளியிடப்படும் என்றார்.

சிவப்பு பச்சை அரிசிக்கான தட்டுப்பாடு தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரி விக்கையில், சந்தையில் சிவப்பு பச்சை அரி சிக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவ்வாறு இருந்தாலும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் மக்கள் விசனம் தெரி விக்கின்றனர். மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை மற்றும் கிழக்கு பகுதிகளிலேயே இந்த சிவப்பு பச்சை அரி சி பயிரிடப்படுகிறது. இதுதொடர்பில் நாங்கள் சில ஆய்வுகளை முன்னெடுத்திருந்தோம். 2024ஆம் ஆண்டில் 2,77,315 ஹெக்டேயர் விவசாய நிலத்தில் சிவப்பு பச்சை அரி சி பயிரிடப்பட்டுள்ளது. அந்த வருடத்தில் இரு போகங்களிலும் 1.1 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை கிடைத்துள்ளது. இந்த வருடத்துக்கான பெரும்போகத்தில் 1,61,065 ஹெக்டேயர் விவசாய நிலத்தில் சிவப்பு பச்சை அரி சி பயிரிடப்பட்டுள்ளது. எனவே, இந்த அறுவடையின்போது 6,48,216 மெற்றிக் தொன் நெல் கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம். எனவே, இந்த வருடத்தில் சிவப்பு பச்சை அரி சிக்கான தட்டுப்பாடு ஏற்படாது.

2024ஆம் ஆண்டில் முன்னைய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட ஒருசில வேலைத்திட்டங்களின் காரணமாகவே இன்று சிவப்பு பச்சை அரி சிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அரசாங்கத் தரப்பில் முடிந்த முயற்சிகளை எடுத்துள்ளோம். இந்தியாவுடனும் கலந்துரையாடி முயற்சித்துள்ளோம். விலைமனு கோரலையும் முன்வைத்துள்ளோம். எனவே, சிவப்பு பச்சை அரி சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறோம்.

எமது நாட்டில் 15- 20 சதவீதமானவர்களாலேயே சிவப்பு பச்சை அரி சி நுகரப்படுகிறது. எனவே, எமது நாட்டில் அறுவடை செய்யப்படும் சிவப்பு பச்சை அரி சி எமது நுகர்வுக்கு போதுமனதாக இருக்கும். இதற்கு முன்னர் இவ்வாறு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது 20 கிலோ கிராம் சிவப்பு பச்சை அரி சி பகிரப்பட்டது. இந்த தீர்மானத்தை எடுக்கும்போது, சிவப்பு பச்சை அரி சி உண்ணாத மக்களுக்கும் அந்த அரிசியை விநியோகித்ததால் அந்த அரி சிக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்பதை அப்போதைய அரசாங்கம் தீர்மானித்திருக்க வேண்டும். ஆகவே, கடந்த அரசாங்கம் சிந்திக்காமல் எடுத்த தீர்மானத்தின் காரணமாகவே இன்று சிவப்பு பச்சை அரி சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

## மிருசுவில்...

2000ஆம் ஆண்டு மிருசுவிலில் எட்டு பேர் கொல்லப்பட்ட வழக்கில் கொழும்பு மேல்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்கவை மன்னித்து விடுதலை செய்ய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவை இரத்துச் செய்யும் தீர்ப்பை இரத்துச் செய்து உத்தரவை வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவின் விசாரணையை பெப்ரவரி 27ஆம் திகதி நடத்த உயர்நீதிமன்றம் நேற்று(15) தீர்மானித்தது.

இந்த மனுக்கள் நேற்று யசந்த கோதாகொட, மஹிந்த சமயவர்தன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதியரசர்கள் மூவர் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும், இந்த பிரதிவாதிக்கு மன்னிப்பு வழங்கியமை தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தால் சமர்ப் பிக்கப்பட்ட நான்கு கோப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று மன்று சுட்டிக்காட்டியது.

தேவைப்பட்டால், கோப்புகளின் நகல்களை வழக்கு தரப்புகளது வழக்கறிஞர்களுக்கு வழங்குமாறு உயர்நீதிமன்ற பதிவாளருக்கு மூன்று நீதியரசர்களை கொண்ட அமர்வு உத்தரவிட்டது. அதன் பின்னர், சம்பந்தப்பட்ட மனுவை பெப்ரவரி 27ஆம் திகதி விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது. இந்த அடிப்படை உரிமை மனுவை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையர் டாக்டர் அம்பிகா சற்குணநாதன் மற்றும் மிருசுவிலில் இறந்தவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட குழுவினர் தாக்கல் செய்திருந்தனர்.

நீதிமன்றத்தால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கும்போது பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறையைப் பின்பற்றாமல், இந்த இராணுவ அதிகாரி க்கு மன்னிப்பு வழங்க 2020ஆம் ஆண்டு கொவிட் தொற்றுநோய் காலத்தில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவு மூலம் அரசியலமைப்பு மற்றும் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டது.

## சட்டத்தரணிகள்...

நேற்று (15) இலங்கை சட்டத்தரணிகள் சங்க செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தலைவர் பதவிக்காக மூன்று வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கமைய, ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட, ராஜீவ் அமரசூரி ய மற்றும் டாக்டர் சுனில் அபேரத்ன ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளதுடன் சதுர கல்ஹேன தனது இரண்டாவது பதவிக்காலத்துக்கு தொடர்வதற்கான வேட்புமனுவை சமர்ப்பித்துள்ளார். அதன்படி, 2025/2026ஆம் ஆண்டுக்கான செயலாளராக சதுர கல்ஹேன போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## வெலேசுதா...

சம்பாதித்தமை தொடர்பில் வெலேசுதா, அவரது மனைவி கயானி பிரியதர்ஷனி மற்றும் உறவுமுறைப் பெண் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வெலேசுதா, அவரது மனைவி கயானி பிரியதர்ஷனி மற்றும் உறவினப் பெண் ஆகியோருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்துகளை பறிமுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## புதிய..

அமெரிக்க வணிக சபையினால் ஏற்பாடு செய்யப்படும் 2025ஆம் ஆண்டுக்காக எலிவேட் ஸ்ரீ லங்கா பிரதான நிறைவேற்று அதிகாரி கள் மாநாடு கொழும்பில் இடம்பெற்றது. அமெரி க்க தூதுவர் ஜூலி சங் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

‘‘ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையிலான புதிய அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்னர் கடமைகளை ஆரம்பித்தது. அதேபோன்று, இன்னும் ஐந்து நாட்களில் ஐக்கிய அமெரி க்காவின் புதிய ஜனாதிபதி கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார். எனவே, இந்த 2025ஆம் ஆண்டு தூதுவர்களின் மாற்றத்துக்கான ஆண்டாக அமையும். நான் எப்போது இந்த பதவியிலிருந்து செல்வேன் என்பது எனக்குத் தெரி யாது. அதன் காரணமாக தற்போதே எனக்கு பிரி யாவிடை நடத்தவேண்டியதில்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்துடன் தொடர்ந்து செயற்படுதல் மற்றும் சர்வதேச பிணைமுறிகளை மறுசீரமைத்தலை இறுதி செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளை நாங்கள் வரவேற்கிறோம்.

அதேபோல் ஊழலுக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுக்கும் அர்ப்பணிப்பையும் நாங்கள் வரவேற்கிறோம். அதேவேளை, நாட்டின் ஸ்திரத்தன்மை மாத்திரம் போதாது. தொடர்ந்தும் உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறன் முன்னேற்றத்தை அதிகரி த்துக்கொள்வதற்காக நீண்ட காலத்துக்கு அவசியமான நிதி மற்றும் பொருளாதாரத்தை உருவாக்கி கொள்வதற்காக அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அண்மையில் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தை எடுத்துக்கொண்டால், அது வெறுமனே சுற்றுச்சூழலை சுத்தம் செய்வதற்கான வேலைத்திட்டம் மாத்திரமல்ல அதற்கும் அப்பால் அரசியல் மற்றும் பொருளாதார, கலாசாரத்தை மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டமாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது எவ்வாறான முக்கிய தீர்மானங்களை எடுப்பார்கள் என்ற விடயத்தை போன்றே இந்த மறுசீரமைப்புக்காக எங்களால் ஒத்துழைப்பு வழங்க கூடிய விதம் தொடர்பிலும் எதிர்பார்ப்புடனேயே இருக்கிறோம். அது ஊழலுக்கு எதிரான வேலைத்திட்டமாக இருந்தாலும் அதற்கு அப்பாலான வேலைத்திட்டமாக இருந்தாலும் நல்லாட்சி மற்றும் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளை மேம்படுத்துவது பலமான அரசாங்கத்துக்கான அடிப்படையாகும்.

அதேபோன்று வர்த்தகத்துக்கு ஏற்புடைய சூழலை உருவாக்குவதும் மிக அவசியமாகும். வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பது பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான அடிப்படை அம்சங்களாகும். கொள்கை வெளியீட்டின் மூலம் இவற்றின் பெறுமதி மேலும் மேம்படும். அவ்வாறான கொள்கைகளை அறிமுகப்படுத்துவதற்காக நானும் அரசாங்கத்துடன் மின நெருங்கிய வகையில் செயலாற்றுகிறேன்.

எமது இரு நாடுகளுக்கு இடையிலும் சௌபாக்கியத்தை ஏற்படுத்திக்கொள்வதற்காக பொருளாதார தொடர்பை பலமாக முன்னெடுத்துச் செல்வதே எனது மறுசீரமைப்பு செயற்பாடுகளில் முக்கிய பங்கை வகிக்கிறது. அமெரி க்கா முடிந்தளவு தற்போது வரையில் இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஒத்துழைப்பை வழங்கி வருகிறது. அதனூடாக இலங்கை இன்று பிரதான ஏற்றுமதி சந்தையாக மாறியுள்ளது. நானும் எனது குழுவும் இலங்கைக்கு தொடர்ந்தும் புதிய வர்த்தக முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்துவருகின்றோம். அவ்வாறே எமது புதிய அரசாங்கம் தெரி வு செய்யப்பட்டு ஸ்திரமடையும் வரை யார் புதிய அமைச்சர்கள், யார் செயலாளர்கள் யார் என்பதை பொறுத்திருந்தே அவதானிக்க நேரி டும். அந்த நியமனங்கள் வழங்கப்பட்டதும் இந்து - பசுபிக் வலங்களுக்கான அமெரி க்காவின் புதிய பொருளாதார மற்றும் தொழில் கொள்கைகள் தொடர்பில் அறிந்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றார்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் தை மாதம் 03ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலக் கவனம் வேண்டும்.

**ரிஷபம்** குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள். உணர்வுகளைக் கட்டுப்ப டுத்திக் கொள்ளவும். வீண் பயம் வேண்டாம்.

**மிதுனம்** உங்களுக்கென எதையாவது இன்று வாங்குவீர்கள். மனத் துணிவுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள்.

**கடகம்** குதர்க்கமான பேச்சுகள் வேண்டாம். பணம், பொருள் கைமாறும்போது கவனமாகச் செயற்படவும்.

**சிம்மம்** நண்பர்கள் சந்திப்பால் நல்லபலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும். தெளிந்த சிந்தனையுடன் சேவையாற்றுவீர்கள்.

**கன்னி** செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் நலக் குறைபாடுகளால் செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்** தொழில், வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப் போனவை திரும்பக் கிடைக்கும். புகழ்,செல்வாக்குடன் விளங்குவீர்கள்.

**விருச்சிகம்** புதிய முயற்சிகளில் வெற்றியும் இலாபங்களும் அமையும். யாரையும் நம்பி எதையும் ஒப்படைத்துச் செல்லாதீர்கள்.

**தனுசு** திட்டமிட்ட பிரயாணத்தால் ஓரளவு இலாபம் உண்டு. எதற்கும் அவசரம் வேண்டாம்.பொறுமையாக இருங்கள்.

**மகரம்** தொழில்,வியாபாரத்தில் அதிக எரிச்சல், கோபமடைவீர்கள். எதற்கும் பொறுமை இழந்துவிடாதீர்கள்.

**கும்பம்** காதல் திருமணம் கைகூடிவரும். பங்கு வியாபாரத்தில் வெற்றியுடன் அதிக இலாபம் கிடைக்கும்.

**மீனம்** நினைத்த காரியத்தில் அதிக முயற்சி இல்லாமலேயே வெற்றி. கடன் நிவர்த்தி, எதிரிகள் கட்டுப்படுவார்கள்.

| | |
|---|---|
| **திதி** | : திருதியை பி.இ.4.06 வரை பின் சதுர்த்தி |
| **நட்சத்திரம்** | : ஆயிலியம் மு.ப.11.16 வரை பின் மகம் |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | : அமிர்த யோகம் மு.ப.11.16 வரை பின் மரண யோகம் |
| **வார சூலை** | : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : காலை- 9.26 – 12.26 மணி வரை மாலை- 4.26–6.26 மணி வரை |
| **ராகு காலம்** | :1.56– 3.26 மணி வரை |
| **எமகண்டம்** | :6.26- 7.56 மணி வரை |
| **குளிகை** | :9.26-10.56 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | :தனுசு-மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் (முற்பகல் 11.16 வரை தனுசு ராசியினருக்கு) |

### அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்

**இன்று முற்பகல் 11.16 மணி வரை**

அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி இன்று முற்பகல் 11.16மணிக்கு மேல் பரணி, கார்த்திகை, மிருகசீரிடம்,புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# இந்தியாவின் 300 மில். ரூபா உதவித்திட்டத்தில் பொலிஸ் நிலையங்களுக்கு கெப் ரக வாகனங்கள்

## இரு நாடுகளுக்கிடையிலுமான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



பொலிஸ் நிலையங்களின் பயன்பாட்டுக்காக ஒற்றை கெப் ரக வாகனங்களை வழங்குவதற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் 300 மில்லியன் ரூபா மானிய உதவியுடன் இந்த ஒற்றை கெப் ரக வாகனங்களை வழங்கும் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டி.டபிள்யூ.ஆர்.பி.செனவிரத்ன ஆகியோரால் நேற்று (15) கையெழுத்திடப்பட்டு பரிமாறிக் கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் பொலிஸ் தலைமை ஆய்வாளர் பிரியந்த வீரசூரிய, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, இலங்கை பொலிஸ் மற்றும் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் மூத்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்தத் திட்டத்தில் வட மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு குறைந்தது 80 ஒற்றை கெப் ரக வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

# உடைப்பெடுக்கும் அபாயத்தில் கல்லோயா நீர்த்தேக்கம்

## 44 குடும்பங்களைச் சேர்ந்த 135 பேர் இடம்பெயர்வு



அம்பாறை, கல்லோயா நீர்த்தேக்கம் உடைப்பெடுக்கும் அபாயத்தில் உள்ளதால் நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதிகளிலுள்ள நூறுக்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அம்பாறையில் உள்ள சேனாநாயக்கபுர, சமபுர மற்றும் சுதுவெல்ல ஆகிய பகுதிகளில் வசித்த 44 குடும்பங்களைச் சேர்ந்த 135 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறையிலுள்ள சேனாநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம் உயர்ந்து, நீர் நிரம்பி வழியும் அளவை நெருங்கியுள்ளது.

7இலட்சத்து 70ஆயிரம் ஏக்கர் அடி நீர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தேக்கம் அதன் அதிகபட்ச வரம்பான 110 அடியை எட்டினால் அது நிரம்பி வழியும் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை (15) நிலைவரப்படி நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 103 அடியாக இருந்தது. இதன் விளைவாக அதிகரித்து வரும் நீர்மட்டத்தை நிர்வகிக்க இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன், அண்மித்த பகுதிகளிலுள்ள மக்களுக்கு அதிகாரிகள் முன்னெச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

இருப்பினும், தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், கல்லோயா நீர்த்தேக்கத்தின் நீர் ஓட்டம் கணிசமாக அதிகரிக்குமென்பதால் வான் கதவுகளை முழுமையாகத் திறக்கவேண்டிய நிலை ஏற்படும். சுதுவெல்ல மற்றும் கொட்டவெஹெர பகுதிகளிலுள்ள ஆற்றங்கரைகள் மண் அரிப்புக்குள்ளாகியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது .

# மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(எஸ்.கணேசன்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து நேற்று (15) ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமொன்று மிதப்பதைக்கண்டு பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அதன்பின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.மீட்கப்பட்ட சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.






தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஜனவரி 16ஆம் திகதி வியாழக்கிழமை

# சர்ச்சைக்குள்ளாகும் ஆசிரிய இடமாற்றம்

ஆசிரிய இடமாற்றங்கள் எந்தவித அரசியல் தலையீடும் இன்றி நிறைவேற்றப்பட வேண்டுமென ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளமை எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

கடந்த அரசாங்க ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் தலையீடுகள் மற்றும் அவற்றின் அடிப்படையில் இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்ட சம்பவங்கள் மீண்டும் நிகழக்கூடாது என ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். ஒரே பாடசாலையில் ஆறு ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய சிலருக்கு இதுவரை இடமாற்ற அறிவிப்பு வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் நீண்ட காலம் பணியாற்ற முயற்சிக்கின்றனர். இதனால் தூரப் பகுதிகளில் ஆசிரியர்கள் தட்டுப்பாடு ஏற்படுகிறது. சுமார் ஐயாயிரம் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிலையில், சிலர் அதே பாடசாலைகளில் தம் பணியைத் தொடர முயற்சிக்கின்றனர். குறிப்பாக, 40 முதல் 50 வயதுடைய ஆசிரியர்கள் தூரப் பகுதிகளில் சேவையாற்ற வேண்டும் எனவும் இது கல்வி சமநிலையை நிலைநிறுத்த உதவும். கடந்த அரசியல் தலையீட்டின் விளைவாக ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள் சரிசெய்யப்பட வேண்டும் எனவும் இதன்மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்த முடியும். இடமாற்றங்கள் சாதுர்யமாக நிறைவேற்றப்பட்டால், அனைத்து மாணவர்களும் சமமான கல்வி வசதிகளைப் பெறுவார்கள் என ஜோசப் ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2020, 2021, 2022 ஆகிய மூன்று வருடங்களிலும் நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை. அதனால் 2022 ஆம் வருடமளவில் 14, 500 விண்ணப்பங்கள் கல்வி அமைச்சுக்குக் கிடைத்தன. அந்த விண்ணப்பங்கள் அனைத்துக்கும் தீர்வு கிடைக்கவில்லை.

கல்விச் சேவையில் இரண்டு விதமாக ஆசிரிய இடமாற்றங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று சாதாரணமாக கோரப்படும் இடமாற்றமாகும் . நீண்ட காலமாக கஷ்டப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுபவர்கள் இதில் உள்ளடங்குவர்.

மற்றது 2017 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்ட வர்த்தமானியை அடிப்படையாகக் கொண்டது. அந்த வகையில் 10 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் உள்ளவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதை அடிப்படையாக வைத்தே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டில் இருந்தே இந்த இடமாற்றம் முறையாக வழங்கப்பட்டு வந்தது. எனினும் கொரோனா சூழ்நிலை காரணமாக வழமையான இடமாற்ற முறைமையில் இழுபறி நிலைமை ஏற்பட்டது.

ஆசிரிய இடமாற்றங்களில் தலையீடுகள் தாராளமாகவே இருக்கின்றன. அரசியல்வாதிகளின் உறவினர்கள்,ஆதரவாளர்கள் விரும்பிய நேரத்தில் விரும்பிய இடங்களுக்கு மாற்றலாகிச் செய்ய முடியும் என்ற நிலையே பலகாலம் இங்கே உள்ளது. சாதாரணமாக இடமாற்றத்துக்கு தகுதியை கொண்டு அதற்காக விண்ணப்பிப்போர் இடமாற்றத்துக்காக அலைவதை மட்டுமே செய்யவேண்டிய நிலைமையுள்ளது. அதுமட்டுமல்ல மகப்பேறுக்காக அல்லது மருத்துவ காரணங்களுக்காக இடமாற்றத்தைக் கோரும் ஆசிரியர்கள் தொடர்பில் எப்போதும் முக்கிய கவனம் செலுத்தப்படுவதில்லை. அவர்களும் நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதாக இருக்கிறது.

ஆசிரிய இடமாற்றங்கள் ஸ்தம்பிக்க அல்லது முறையாக நடக்காமல் இருப்பதற்கு இன்னொரு காரணமும் உள்ளது. அதுதான் அதிபர் மற்றும் கல்வித் பணிமனைகளில் பணிபுரிவோருக்கு இருக்கும் அரசியல் செல்வாக்கு. தமக்கு வேண்டப்பட்டவர்கள் இடமாற்றம் பெற இலகுவாக அனுமதிப்பதற்கும் வேண்டாதவர்களுக்கு அனுமதி மறுப்பதற்கும் அதே அடிப்படை. இடமாற்றங்களின்போது கோரப்படும் இலஞ்சம் குறித்தும் இங்கே கவனிக்கப்படவேண்டும்.வெறும் நிதி இலஞ்சமாக அல்லாமல் அதற்கப்பால் சில “அட்ஜஸ்ட்” செய்தாலே சம்மதிப்போம் என்று எதிர்பார்க்கும் கல்வித்துறை பிரமுகர்களும் உள்ளனர் என்பது இங்கு உன்னிப்பாக நோக்கப்படவேண்டும்.

ஆசிரியர் சமூகத்தின் பெரும்பாலானோர் அங்கீகரிக்கக் கூடிய ஆசிரியர் இடமாற்றத்துக்கான ஒழுங்கமைக்கப்பட்ட இடமாற்றப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டு, அது தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்படுமாயின், ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான சிக்கல் நிலைக்கானத் தீர்வை எட்டமுடிவதுடன் இடமாற்றத்தினால் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் உள ஆரோக்கியமற்ற கற்பித்தல் சூழ்நிலையிலிருந்து அவர்களை மீட்டு, உள ஆரோக்கியத்துடனான கற்பித்தல் பணியில் ஈடுபடுத்தக் கூடியதும் அவர்கள் ஈடுபடக் கூடியதொரு நிலையையும் உருவாக்க முடியும்.

# உரையாடும் உடல்மொழிகள்!

**முனைவர் எஸ். பாலசுப்ரமணியன்**



நாம் அன்றாடம் பலரைச் சந்திக்கிறோம். நண்பர்கள், குடும்பத்தினர், சக பணியாளர்கள் எனப் பலருடன் உரையாடுகிறோம். அவர்களுடன் நாம் உரையாடும் தன்மையே, நமது அடையாளத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறது.

நமது சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் அனுபவங்களைத் திறந்த மனதோடு பகிர்வதன் மூலம் பல அனுபவங்களைப் பெறுகிறோம்; பல சிக்கல்களுக்கும் விடை காண்கிறோம். உரையாடலானது தகவல் பரிமாற்றத்துக்காகவேயென்றாலும், அதில் கேட்பது, புரிந்துகொள்வது, தெளிவாகப் பேசுவது போன்ற திறன்களும் உள்ளடங்கியுள்ளனவே. நல்ல உரையாடலுக்கு இவை அவசியம் வேண்டும்.

குழு உரையாடல்களில் ஒருவர் பேசும்போது, மற்றொருவர் குறுக்கிட்டு இடையூறு செய்வதை சில இடங்களில் காண்கிறோம். தாங்கள் கூறுவதை மட்டுமே மற்றவர்கள் ஏற்கவேண்டுமென இவர்கள் பிடிவாதமாக இருக்கிறார்கள். கைகளை உயர்த்தி, உடல் அசைவுகள் மூலம் மற்றவர்களுக்கு அழுத்தம் கொடுத்துப் பேசுவது நல்ல உரையாடலை சீர்குலைக்கிறது. மற்றவர்களின் கருத்துகளை நிதானமாகக் கேட்பதும் குறைகளை ஆக்கபூர்வமாக முன்வைப்பதுமே பயனுள்ள உரையாடலாக அமையும்.

உரையாடலின்போது நாம் வெளிப்படுத்தும் உணர்வுகள் ஆழ்மனதில் பதிகின்றன. மகிழ்ச்சி, ஆனந்தம், நெருக்கம், அமைதி, ஆச்சரியம், புதுமை, கவலை, அன்பு, மதிப்பு போன்ற உணர்வுகள் மீண்டும் நம்மிடம் மலரும் நினைவுகளாக வெளிப்படுகின்றன.

**எதை நோக்கிச் செல்கிறோம்?**

வாழ்வியல் நோக்கங்கள் யாதென்று தெரியாமல் இயங்கும் இன்றைய நவீன வாழ்க்கைச் சூழலில் மனமொத்த மனிதர்களை இனம் காண்பதையும் நமது உணர்வுகளை உரையாடலாக்குவதையும் தவறவிடுகிறோம்.

ஒருவரின் பேச்சை ஆர்வமுடன் கேட்பதன் மூலம், நம் உடலில் நேர்மறையான மாற்றங்கள் தூண்டப்படுவதை அறிவியல் நிரூபித்துள்ளது. உளப்பூர்வமாக காது கொடுத்துக் கேட்டு, நம் உள்ளத்தினூடே நடைபெறும் உன்னத உரையாடல்கள், நம்மிடம் ஆக்ஸிடோசின், செரோடோனின் போன்ற மகிழ்ச்சி ஹோர்மோன்களைச் சுரந்து உடல் நலமும் மன வளமும் பெற்றிட வழிவகுக்கின்றன.

நம்முடன் பேசிக் கொண்டிருப்பவரிடம் முழுக் கவனத்துடன் பேச நமது மனதைப் பக்குவப்படுத்த வேண்டும். இதனால் நமது உரையாடல்கள் வெற்றாக இல்லாமல், உணர்வுகளைக் கலக்கச் செய்யும். ஒருவரை நேரில் சந்தித்துப் பேசும்போது, கைபேசியைத் தவிர்த்து, தனியே வைத்துவிட்டு உரையாடலாம். நண்பர்களுடனும் குடும்பத்தினருடனும் செலவு செய்யும் நேரங்களிலும் நம்மைச் சுற்றியுள்ள உலகை மறந்து அந்த கைபேசியின் சிறிய திரையிலேயே நம் மனதைச் சங்கமிக்கவிடுகிறோம். இதுபோன்று, உறவுகளைப் பேணாத செயல்களைத் தவிர்த்து, மனமுவந்து உரையாடலாமே! நாம் உரையாடும்போது பயன்படுத்தும் ‘ஆமாம்’, ‘உம்’, ‘ஓ’ போன்ற வார்த்தைகளின் அளவு சிறிதே! ஆனால், இத்தகு ஊக்குவிப்பு வார்த்தைகளே, நான் உங்களை அக்கறையுடன் கவனிக்கிறேன் என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லும்.

உலகளாவிய வணிக உரையாடல்களில், உடல் மொழி 40% வரை பங்கு வகிப்பதாகச் சொல்கிறார்கள். 2024 இல் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், ‘சுவாரஸ்யமாக உள்ளதே!’, ‘தொடருங்களேன்!’ போன்ற நம்பிக்கை வார்த்தைகளைப் பயன்படுத்தும்படி தொழிற்றுறையினர் சிலருக்கு அறிவுறுத்தப்பட்டது. இதனால் அவர்கள், முன்பைவிட 36% எளிதில் அணுகும் தன்மையைப் பெற்றனர். எப்போதும் கடுமையாகவே பேசும் பல நிறுவன மேலாளர்கள், நல்ல உடல்மொழியுடன் உரையாடும்போது, அந்த நிறுவனத்தின் வளர்ச்சி 21% அதிகரித்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

சிலர் மாயாஜால வார்த்தைகளைப் பயன்படுத்தி உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவர். ஆனால், நாம் பயன்படுத்தும் வார்த்தைகளும் எண்ணங்களும் பொருந்தினால் மட்டுமே அது உத்தமர் தம் உறவைப் பெற்றுத் தரும். உரையாடல்களில் நிகழும் பொய்மையை, உடல் மொழிகள் காட்டிக் கொடுத்துவிடும். ஒருவரின் உணர்வுகள், எண்ணம், ஆளுமைகளை கண்ணசைவு, உடல் தோரணை மற்றும் சைகைகளோடு குரல் வெளிப்பாடுகளிலும் கண்டறிய முடியும்.

அமெரிக்காவில் ‘த ஓப்ரா வின்ஃப்ரி ஷோ’ என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி மிகவும் பிரபலமான டாக் ஷோவாக இருந்தது. இந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளர் ஓப்ரா வின்ஃப்ரி மற்றவர்களுடன் உரையாடும்போது சரியான உடல் மொழி மற்றும் முகபாவங்களைப் பயன்படுத்தினார். இதனால் இந்த நிகழ்ச்சி 25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து ஒளிபரப்பானது. உணர்வுகளைப் புரிந்துகொண்டு உரையாடும் தன்மை முழு வெற்றியைத் தரும்.

சூழல், கலாசாரம் மற்றும் தனிப்பட்ட பண்புகள் ஒருவரின் உடல் மொழியின் புரிதலை மாற்றுகிறது. குடும்ப உறவுகளிடையே உணர்வுகளும் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் வேறுபடாமல் இருக்க சரியான உரையாடலும் உடல் மொழியை அறிதலும் அவசியமாகிறது.

அலுவலகத்தில் ஏற்பட்ட ஒரு சிக்கலைப் பற்றிய கவலையில் இருந்தார் ஒரு கணவர். அவரை உணவு உண்ணும்படி அவரது மனைவி அழைக்க, கணவர் கைகளைக் கட்டிக்கொண்டு, தலையைச் சாய்த்தபடி அமர்ந்திருந்தார். காரணம் புரியாத மனைவி, கணவர் எப்போதுமே இப்படி கோபமாகவே இருப்பதாக எண்ணி வருத்தமுற்றார். மனைவியின் உடல்மொழியைச் சரியாகப் புரிந்த கணவர், நிலைமையைச் சரி செய்தார். திருமண பந்தத்தில், உணர்வுகளைத் திறந்த மனதோடு பகிர்வதும் உடல் மொழியைச் சரியாகப் புரிந்து செயற்படுவதும் துணையுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தும்.

உரையாடல்கள் என்பன வெறும் வார்த்தைகளின் பரிமாற்றம் என்பதையும் தாண்டி, உடல் மொழிகள், முகபாவங்கள் மற்றும் கேட்பதில் கவனம் ஆகியனவும் நமது உரையாடலியல் இணையும்போது, சிறந்த புரிதலோடு உறவுகள் வலுப்படும். கவனமாகக் கேட்டுப் பழகுவது, உணர்வுகளை உணர்ந்து பதிலளிப்பது, கைபேசியை விலக்கி வைத்து உரையாடலில் ஈடுபடுவது போன்ற எளிய செயல்களைச் செய்யத் தொடங்கினால் நாமும் சிறந்த உரையாடல்களை நிகழ்த்துபவர்களாக மாற முடியும்.

*நன்றி – தினமணி*

# "அரசியல் கைதிகள் இல்லை" என்ற பழைய பல்லவியை பாடாமல் தமிழ் கைதிகளை விரைவில் விடுவியுங்கள்!

## மனோ கணேசன் அரசுக்கு இடித்துரைப்பு



"சிறையில் அரசியல் கைதிகள் இல்லை" என்று அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூறுகிறார். இவர் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் தம்பி மகன். இன்றைய ஜே.வி.பி. அரசில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர். அன்று அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கி போராடிய தமது கட்சி அங்கத்தவர்களை “அரசியல் போராளிகள்” என்று கூறிய ஜே.வி.பி., இன்று தமிழ் அரசியல் போராளி கைதிகளை “அரசியல் கைதிகள்” என அங்கீகரிக்க மறுக்கிறது.

இது எங்களுக்கு பழகிப்போன ஒரு பழைய பல்லவி. இன்று புது புரட்சி மாற்றம் செய்ய போகிறோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த புரட்சி அரசாங்கமும் அதே அரைத்த மாவையே அரைக்கிறது. இப்படியான பல பல்லவிகளை கேட்டு, முரண்பட்டு, ஜனநாயக ரீதியாக போராடிய வரலாற்றை கொண்ட எமக்கு, இது பழகிப் போன ஒரு மேலாதிக்க அரசியல் கருத்து.

“அரசியல் கைதிகள் இல்லை” என்ற பழைய பல்லவியை பாடாமல் தமிழ் அரசியல் கைதிகளை உடனேயே விடுவியுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கருத்து தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

"சிறையில் அரசியல் கைதிகள் இல்லை" என்ற கருத்தைத்தான் எப்போதும் எல்லா சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்களிலும் எல்லா அமைச்சர்களும் சொன்னார்கள். அரசாங்க தரப்பினர் அப்படிதான் சொல்வார்கள். அவர்களுக்கு "பயங்கரவாதி", மக்களுக்கு "போராளி". பலஸ்தீனம் முதல் இலங்கை வரை, உலகம் முழுக்க போராட்டங்கள் நிகழ்ந்த நாடுகளில் இப்படி தான்.

இந்நாட்டில், 1971ல் தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே ஆயுதம் தூக்கி பின்னர், 1989லும் ஆயுதம் தூக்கி ஜே.வி.பி. போராட்டம் செய்த போது, கைதாகி சிறையில் இருந்த ஜே.வி.பி. போராளிகளை, அன்றைய அரசாங்கம், "பயங்கரவாதிகள்" என்றது. ஆனால் ஜே.வி.பியினர், "இல்லை, அவர்கள் அரசியல் போராளிகள்" என்றார்கள்.

2015-2019 கால நமது நல்லாட்சியிலும் இடைக்கிடை ஓரிரு அமைச்சர்கள் இப்படி சொன்னார்கள். ஆனால் அன்றைய தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்து, அவர்களை கண்டித்து, அமைச்சரவைக்குள் அவர்களைப் புறந்தள்ளி, ஏனைய முற்போக்கு அமைச்சர்களுடனும் வெளியே தமிழ் தேசியக் கட்சிகளுடனும் இணைந்து, கணிசமான தமிழ் அரசியல் கைதிகளை நாம் சத்தமில்லாமல் விடுவித்தோம். தமிழ் அரசியல் கைதிகளை அதிகமாக விடுவித்தது எமது நல்லாட்சி அரசாங்கம்தான். இதில் மாற்று பேச்சுக்கு இடமில்லை. இதனால்தான் இன்று வரை இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்தது.ஆனால், அன்று ஆயுதப் போராட்டம் செய்த ஜே.வி.பியே, இன்று இப்படி கூறுகிறது. “அரசியல் கைதிகள் இல்லை” என்று கூறி, அவர்களுக்கு பயங்கரவாதிகள் பட்டம் சூட்ட முனைகிறது. 1971ல், தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே, ஆயுதம் தூக்கிய தமது அங்கத்தவர்களை அரசியல் போராளிகளாக அடையாளம் காணும் ஜே.வி.பி., கைதாகி சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களை, அரசியல் கைதிகள் இல்லை என்று கூறுகிறது. இந்த இரட்டை வேடம், இவர்களுக்கு இன்று வாக்களித்த செந்தமிழர்களுக்கு தான் வெளிச்சம்.

# இன்றைய நாளில்...

- 1761 – பிரித்தானியா பாண்டிச்சேரியை பிரான்ஸிடம் இருந்து கைப்பற்றியது.
- 1969 – சோவியத் விண்கலங்களான சோயுஸ்-4, சோயுஸ்-5 ஆகியவை முதல் தடவையாக புவியின் சுற்றுப்பாதையில் விண்வெளி வீரர்களைப் பரிமாறிக் கொண்டன.
- 1991 – அமெரிக்கா, ஈராக் மீது போரை அறிவித்தது. வளைகுடாப் போர் ஆரம்பமானது.
- 1993 – விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் கிட்டு உட்பட 10 விடுதலைப் புலிகள் வெளிநாடொன்றில் இருந்து இலங்கை திரும்புகையில் சர்வதேசக் கடற்பரப்பில் இந்தியக் கடற்படையால் சுற்றி வளைக்கப்பட்டபோது கப்பலை வெடிக்க வைத்து இறந்தனர்.
- 2003 – கொலம்பியா விண்ணோட்டம் தனது கடைசிப் பயணத்தை ஆரம்பித்தது. இது 7 விண்வெளி வீரர்களுடன் 16 நாட்களின் பின்னர் பூமிக்குத் திரும்புகையில் வெடித்துச் சிதறியது.
- 2008 – போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து இலங்கை அரசு அதிகாரபூர்வமாக விலகியது.
- 2008 – இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இலங்கையில் தனது பணிகள் அனைத்தையும் நிறுத்தியது.

# நக்கல் நமசிவாயம்

***அரசாங்கம் டெஸ்ட் மெட்ச் விளையாடுறதால கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டுமென்று அமைச்சர் ஒருவர் சொல்லுறார்.. ரீ 20 விளையாடப் போற மாதிரியல்லே பேச்சு இருந்தது..***



# சீமெந்துக்கான செஸ் வரி குறைப்பு - அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவை அதிகரிக்க கோபா குழுவில் அனுமதி

## செஸ் வரி மூலம் பெறும் வருமானத்தை சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு வழங்கவும் குழுவின் தலைவர் ஆலோசனை





சீமெந்துக்கான செஸ் வரியை குறைப்பதற்கு நிதி அமைச்சின் அதிகாரிகள் முன்வைத்த யோசனைக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒரு கிலோ சீமெந்து ஒரு ரூபாவால் குறைவதுடன், ஒரு மூடை சீமெந்தின் விலை சுமார் 100 ரூபாவால் குறைவதாக நிதி அமைச்சின் அதிகாரிகள் குழுவில் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் அரசாங்க நிதி பற்றிய குழு அண்மையில் (08) பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் கீழ் 2400/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை, 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் 2399/16ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மற்றும் 2401/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை, 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 06 கட்டளைகள் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் 2415/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் என்பன குழுவில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அதற்கமைய, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2400/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. அதன்கீழ் ஏற்றுமதி அபிவிருத்திக்கு விதிக்கப்படும் செஸ் வரி மூலம் பெறும் வருமானத்தை நேரடியாக சம்பந்தப் பட்ட நிதி நிறுவனங்களுக்கு பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது பொருத்தம் என குழுவின் தலைவர், நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். அத்துடன், ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்தின்போது ஏற்பட்ட கருங்கல் ஏற்றுமதிக்காக விதிக்கப்பட்ட வரியை குறைப்பதற்கான முன்மொழிவுக்கும் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கமைய அந்தக் கருங்கல் ஒரு மில்லியன் மெற்றிக்தொன் ஏற்றுமதிக்கு ஒரு கன மீற்றருக்கு 1000 ரூபா வரி அறவிடப்படும்.

அத்துடன், 2002ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் 2415/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் கருத்திற் கொள்ளப்பட்டது.

இதன்போது, இவ்வாண்டு இறுதி வரை அஸ்வெசும பயனாளிகளுக்கு வழங்கப்படவேண்டிய நலன்புரி கொடுப்பனவுக்கு குழுவின் அனுமதி வழங்கப்பட்டது. இதன்போது, மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கு வழங்கப்படும் பதினைந்தாயிரம் ரூபா உதவித்தொகையை பதினேழாயிரத்து ஐநூறு ரூபாவாகவும் எட்டாயிரத்து ஐநூறு ரூபா வழங்கும் குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபா வழங்குவதற்கும் இரண்டாயிரத்து ஐநூறு ரூபா வழங்கும் குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா வழங்குவதற்கும் மேலும் ஐயாயிரம் ரூபா வழங்கும் குடும்பங்களுக்கு அந்தத் தொகை மாறாமல் வழங்குவதற்கும் குழு அனுமதி வழங்கியது.

அத்துடன், 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் 2399/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலுக்கு குழுவின் அனுமதி வழங்கப்படவில்லை என்பதுடன், 2401/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மட்டக்களப்பு பகுதியில் நிர்மாணிக்கப்படும் ஆடைத் தொழிற்சாலை தொடர்பான கட்டளையை மீண்டும் குழுவில் கருத்திற் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், செல்லுபடியாகும் காலங்களை நீடிப்பதற்கும் வரிகளைக் குறைப்பதற்கும் 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 06 அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட 06 கட்டளைகள் குழுவில் கவனத்திற் கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, சாணக்கியன் இராசமாணிக்கம், கலாநிதி கௌஷல்யா ஆரியரத்ன, நிமல் பலிஹேன, விஜேசிறி பஸ்னாயக்க, திலின சமரகோன், சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கோப் குழுவின் தலைவராக நிஷாந்த சமரவீர எம்.பி. தெரிவு



பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி நிஷாந்த சமரவீர ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முதன்முறையாக அண்மையில் (09) பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் தெரிவுசெய்யப்பட்டார்.

குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீரவின் பெயரை பாராளுமன்ற உறுப்பினர் சந்திம ஹெட்டியாரச்சி முன்மொழிந்ததுடன், அதனை பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ராஜபக்ஷ வழிமொழிந்தார்.

தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் உரையாற்றிய கோப் குழுவின் புதிய தலைவர், குழுவின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். அத்துடன், வழங்கப்பட்ட பொறுப்பை மிகவும் முக்கியமானதாகக் கருதுவதாகவும் எதிர்காலத்தில் பக்கச்சார்பின்றி செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மதவாச்சியில் பெண்ணொருவரை கொலைசெய்த சந்தேகநபர் கைது

*அநுராதபுரம் நிருபர்*

பெண் ஒருவரை கொலைசெய்து குளியொன்றில் போடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை மதவாச்சி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மதவாச்சி பொலிஸ் பிரிவின் கட்டுவெல மயானத்துக்கு அருகிலுள்ள கிரவல் குளியொன்றில் பெண் ஒருவருடைய சடலமொன்று உள்ளதாக கடந்த 09ஆம் திகதி மதவாச்சி பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய, விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் முள்ளியாவேலி பகுதியில் வைத்து கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 39 வயதுடைய கெக்கிராவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது.

36 வயதுடைய குருத்தலாவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட பெண் ஒருவரே கொலை செய்யப்பட்டு, மதவாச்சி ,கட்டுவல பகுதியிலுள்ள கிரவல் குளியில் போடப்பட்டிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள்

## ஆளுநர் செயலகத்தில் சத்தியப்பிரமாணம்



*இரத்தினபுரி நிருபர்*

சப்ரகமுவ மாகாண அரசசேவைகள் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி அதிகார சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை (10) சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன முன்னிலையில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து சத்தியப்பிரமாணம் செய்துகொண்டு தமது கடமைகளை ஆரம்பித்தனர்.

மேற்படி சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தலைவராக அரசசேவை சேவையின் விசேட தர அதிகாரியான எச்.டபிள்யூ.குணதாச, ஏனைய உறுப்பினர்களாக வைத்தியர் டி.டி.ஐ.லியனகே, சட்டத்தரணி ஸ்வர்ணா கே.மல்லிகாராச்சி, ஆர்.சி.ராஜபக்ஷ, ஏ.ஏ.ஜி.அபேவர்தன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் கே.ஜி.எஸ்.நிஷாந்த, சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் தர்ஷன சமரசேகர, ஆளுநரின் உதவிச் செயலாளர் இசுரி ரத்நாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# 18 நாட்களுக்கு மதுபானசாலைகளுக்கு பூட்டு

2025ஆம் ஆண்டில் நாடு முழுவதுமுள்ள மதுபானசாலைகள் 18 நாட்கள் மூடப்பட்டிருக்கும் என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

அந்தவகையில், இவ்வருடத்தின் முதல் போயா தினமான கடந்த திங்கட்கிழமை (13) மதுபானசாலைகள் நாடளாவிய ரீதியில் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனடிப்படையில் மேற்படி திகதிகளின் முழுப் பட்டியல் பின்வருமாறு, ஜனவரி - 13 திங்கட்கிழமை - துருத்து பௌர்ணமி போயா தினம், பெப்ரவரி - 04 செவ்வாய்க்கிழமை - சுதந்திர தினம், பெப்ரவரி 12 - புதன்கிழமை - நவம் பௌர்ணமி போயா தினம், மார்ச் 13 - வியாழக்கிழமை – மெதின் பௌர்ணமி போயா தினம், ஏப்ரல் - 12 சனிக்கிழமை - பக் பௌர்ணமி போயா தினம், ஏப்ரல் - 13 ஞாயிற்றுக்கிழமை - சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினத்துக்கு முந்தைய நாள், ஏப்ரல் - 14 திங்கட்கிழமை - சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினம், மே - 12 திங்கட்கிழமை - வெசாக் பௌர்ணமி போயா தினம், மே - 13 செவ்வாய்க்கிழமை - வெசாக் பௌர்ணமி போயா தினத்துக்கு அடுத்த நாள், ஜூன் - 10 செவ்வாய்க்கிழமை - பொசன் பௌர்ணமி போயா தினம், ஜூலை - 10 வியாழக்கிழமை - எசல பௌர்ணமி போயா தினம், ஓகஸ்ட் - 08 வெள்ளிக்கிழமை - நிகினி பௌர்ணமி போயா தினம், செப்டெம்பர் - 07ஞாயிற்றுக்கிழமை - பினர பௌர்ணமி போயா தினம், ஒக்டோபர் - 03 வெள்ளிக்கிழமை - உலக மதுவிலக்கு தினம், ஒக்டோபர் - 06 திங்கட்கிழமை - வப் பௌர்ணமி போயா தினம், நவம்பர் - 05 புதன்கிழமை - இல் பௌர்ணமி போயா தினம், டிசம்பர் - 04 வியாழக்கிழமை - உந்துவப் பௌர்ணமி போயா தினம், டிசம்பர் - 25 வியாழக்கிழமை - நத்தார் தினம்.

# பெரும்போகத்துக்காக விசேட விதை நெல் திட்டம்

விவசாயத் திணைக்களம் மற்றும் விவசாய அமைச்சு ஆகியன ஒன்றிணைந்து பெரும்போகத்துக்காக விசேட விதை நெல் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளன.

உத்தரவாத விதை நெல்லை விவசாயிகளுக்கு வழங்குவதனால் தரமான மற்றும் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கு இத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

விவசாயத் திணைக்களத்தின் பதளகொடை நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாக இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

# சிறுநீரக உதவி கோரல்

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கு (45 வயது) சிறுநீரக மாற்று சிகிச்சை செய்வதற்கு O+, O-, B+, B- சிறுநீரக உதவி கோரப்படுகின்றது.

வழங்குநர்கள் 25 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம். எச்.எல்.ஏ (HLA) பரிசோதனை செய்தவர்கள் விரும்பத்தக்கது.

மதுப்பழக்கம், புகைப்பழக்கம் இல்லாதவராகவும் நீரிழிவு போன்ற நோய்களினால் பாதிக்கப்படாதவராகவும் இருக்கவேண்டும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும். உதவ விரும்புவோர் 0721140736 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (15.01.2025)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 177.9628 | 187.3416 |
| கனேடியன் டொலர் | 201.0597 | 209.8205 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.7514 | 41.3711 |
| யூரோ | 297.7677 | 310.0646 |
| ஜப்பான் யென் | 1.8316 | 1.9060 |
| சிங்கப்பூர் டொலர் | 210.7904 | 220.4378 |
| ஸ்ரேலிங் பவுன் | 352.5491 | 366.9532 |
| சுவிஸ் பிராங் | 315.7033 | 330.9126 |
| ஐ.அ. டொலர் | 290.7448 | 299.2836 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 781.4640 |
| குவைட் | குவைட் தினார் | 954.5909 |
| ஓமான் | ஓமான் றியால் | 765.2249 |
| கட்டார் | கட்டார் றியால் | 80.8054 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.4837 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.2059 |

# பாடசாலை மாணவர்களின் பொறுப்புணர்வை மேம்படுத்துவதில் ஆசிரியர் - பெற்றோரது பங்களிப்பு



ஒழுக்கம் என்றால் என்ன? என்ற விடயத்தில் எமது சமூகங்களில் ஒருமித்த கருத்து நிலவுவதாக தெரியவில்லை. தவறு செய்தவர்கள் தொடர்பாக உடலியல் தண்டனைகளை வழங்குதலின் வகிபங்கு என்ன என்பதில் தமது சமூகம் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. ஆசிரியர்களானவர்கள் அதிகாரம் செலுத்துதல், ஒழுக்கம், கட்டுப்பாடு, ஆதிக்கம் செலுத்துதல் என்பவற்றில் எதை கையாள்வது என்பதில் அச்சத்திலேயே உள்ளனர்.

மறுபக்கம் பெற்றோர் தமது பொறுப்புணர்வை வெளிக்காட்ட முடியாமல் அன்பினால் தமது கட்டுப்பாட்டை வெளிக்காட்டும்போது மாணவர்கள் எதிர்மறையான செயற்பாடுகளில் ஈடுபட முயற்சிக்கின்றனர். இன்று பாடசாலை, வீடு, சமூகம் என எல்லா இடங்களிலும் ஒழுக்கம் பற்றிய பிரச்சினைகள் மேலோங்கி காணப்படுகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக வகுப்பறை ஒழுக்கம் என்ற விடயம் இன்று எல்லா ஆசிரியர்களுக்கும் சவாலாக அமைந்துள்ளது. அரசாங்கமும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி பாடசாலைகளில் வழங்கும் உடலியற் தண்டனைகளை சட்டங்களினால் தடை செய்துள்ளது. உளவியலாளர்களின் கருத்துகளும் இவை சார்பாகவே உள்ளன. இருப்பினும் எத்தனை உளவியல் துறை பயிற்சியை எடுத்த ஆசிரியராலும் வகுப்பறை ஒழுக்கத்தை கட்டியெழுப்ப முடியாத நிலையில் தற்போது தவிக்கின்றனர்.

இந்நிலைமைகளுக்கு ஒரு தீர்வாக பாடசாலைகளிலும் வீடுகளிலும் பிள்ளைகளிடத்தே சுய ஒழுக்கம், தனியார் பொறுப்புணர்வு என்பவற்றை வளர்க்க வேண்டிய தேவை ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் எழுந்துள்ளது.

மாணவர்களிடத்தே இன்று பெருகிக் காணப்படும் ஒற்றுமையின்மை, வன்முறை, சவால் விடுத்தல், அக்கறையின்மை, சமூக வலைத்தளங்களின் மீதான மோகம் காரணமாக உடலியல் தண்டனை இன்றி இவர்களை சமாளிப்பது இயலாத காரியம் என பலரும் வாதிடுகின்றனர்.

எந்த பாடசாலைகளிலும் வீடுகளிலும் மாணவர்களின் ஒழுங்கைப் பேணுவதின் அவசியத்தை எவரும் மறக்க முடியாது. பாடசாலைகளில் ஒழுங்கை நிலைநாட்ட ஆசிரியர்கள் வெகுமதியளித்தல், தண்டனை வழங்கல் போன்ற உத்திகளை காலாகாலமாக செய்து வருகின்றனர். மறுபக்கம் பெற்றோர்களும் இதனையே செய்கின்றனர்.

எனவே பாடசாலைகளிலும் வீடுகளிலும் சுய ஒழுக்கம் தனியார் பொறுப்புணர்வை மேம்படுத்த செயற்படும் தேவை ஒவ்வொருவருக்கும் எழுந்துள்ளது. இதன் மூலமாகவே எமது ஆளுமைகளின் எதிர்காலத்தை வெல்லமுடியும். மாணவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதற்கு வெகுமதிகள் அவசியமில்லை. காரணம் வெகுமதிக்காக மட்டும் நற்செயல்களை காட்டும் ஒரு பிரிவினர் உருவாகிக் கொண்டிருப்பதால் உடமையாக இருப்பதற்கும் கூட்டுறவு மற்றும் ஆக்க நடத்தை மூலம் பங்களிப்பு செய்யவும் அவர்கள் விரும்புவர்.

ஆசிரியர்கள், மாணவர்களின் கருத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பமளிக்க வேண்டும். இதனை பாடப்பரப்பின் ஊடாகவே கூட செயற்படுத்த முடியும். சித்திரம், நடனம், சங்கீதம் போன்ற அழகியல் பாடங்களின் ஊடாக ஏற்படுத்த முடியும். அது மட்டுமின்றி பெற்றோர் தமது பிள்ளைகளை இறை நம்பிக்கை, தியானம் போன்றவற்றில் ஈடுபடுத்தி தமது சுய கட்டுப்பாட்டை ஏற்படுத்த வழிசெய்து கொடுக்க முடியும்.

தனியாள் பொறுப்புணர்வு எனும் போது தனது கடமைகளை சரியாக செய்தல், பொருட்களை இருக்கும் இடத்தில் வைத்தல், சுய மேம்பாட்டுக்கான திறன்களை வளர்த்தல், தனது ஆடைகளை தானே உயர்த்தி அழுத்திக் கொள்ளல், வீட்டு வேலைகளில் பெற்றோருக்கும் உதவுதல் போன்றவற்றின் ஊடாக தனியார் பொறுப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

இதேபோல், பாடசாலைகளிலும் தமது இலவச பாடநூல்களை சுத்தமாக வைத்திருத்தல் தமது பொருட்களில் கவனம் செலுத்துதல், பொது சொத்துக்களைப் பேணுதல், மூத்தோரை மதித்தல், வெற்றி தோல்வியை சமமாக மதித்தல், இன்னும் பல விடயங்களை விதிமுறை தவறாது பயன்படுத்துவதை ஆசிரியர்கள் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

கூரான கத்தி, சூடான அடுப்பு, சைக்கிள் என்பவற்றுடன் செயலாற்றும் சிறுவர்கள் முறைப்படி இவர்களைப் பயன்படுத்தாவிட்டால் எழும் விளைவுகளை அறிவார்கள். இதன் காரணமாக அவைகளை விதிமுறை தவறாது பயன்படுத்த முயற்சிக்கின்றனர். எனவே பொறுப்புணர்வை ஏற்படுத்த ஆசிரியர்களும் பெற்றோர்களும் அனுபவங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மாணவர்கள் பொறுப்புணர்வற்ற வகையில் இருக்கும்போது அவர்களின் இலக்கை பற்றி அவர்கள் விளங்கிக் கொள்ள இங்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. தமது நடத்தைகளை விளங்கிக் கொள்ளவும் மாற்று வழிகளை தேர்ந்தெடுக்கவும் வகுப்பறை கலந்துரையாடல்களே மிக பொருத்தமானவை. இங்கு ஆசிரியர்களின் வகிபங்கு வலியுறுத்தப்படுகின்றது. மாணவர்களுடன் உள்ள நல்லுறவு கெடாத வகையில் மாணவர்கள் மத்தியில் சுயநெறிப்படுத்தும் நடத்தை கோலத்தை கட்டியெழுப்ப ஆசிரியர்களும் பெற்றோரும் தமது பிள்ளைகளை அணுகுமுறையிலேயே தங்களது வெற்றிகளும் தங்கியுள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

*மூக்கன் புஸ்பராணி - நோட்டன் பிரிட்ஜ்*

# இலங்கைக் காலநிலை பற்றிய பாராளுமன்ற ஒன்றியத்தின் இணைத் தலைவர்கள் தெரிவு



பத்தாவது பாராளுமன்றத்தின் இலங்கைக் காலநிலை பற்றிய பாராளுமன்ற ஒன்றியத்தை மீண்டும் ஸ்தாபிப்பது தொடர்பான கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது ஒன்றியத்தின் இணைத் தலைவர்களாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) எல்.எம்.அபேவிக்ரம ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்போது, ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர்களாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசித நிரோஷண எகொட வித்தான ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன், இணை அமைப்பாளர்களாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இங்கு உரையாற்றிய ஒன்றியத்தின் இணைத் தலைவர்கள், முழு உலகமும் காலநிலை மாற்றம் தொடர்பில் கவனம் செலுத்தும் காலப்பகுதியில், காலநிலை மாற்றத்தினால் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மற்றும் அதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்காலத்தில் கூட்டாகக் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தனர்.

# மாவோ சேதுங் நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி அநுர







சீன மக்கள் குடியரசின் ஸ்தாபகத் தலைவர் மாவோ சேதுங் நினைவிடத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சென்று நேற்று (15) அஞ்சலி செலுத்தினார்.

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் (Xi Jinping) அழைப்பின் பேரில் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு அடங்கலான கண்காட்சியைப் பார்வையிட்டார்.

பின்னர், சீன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான குங் அரண்மனை அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார்.அதனைத் தொடர்ந்து சீன மக்கள் குடியரசின் ஸ்தாபகத் தலைவர் மாவோ சேதுங் நினைவிடத் துக்குச் சென்று மலரஞ்சலி செலுத்தினார். வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் இவ்விஜயத்தில் இணைந்து கொண்டனர்.

# நீர் விநியோகத் தடை

அத்தியாவசிய பராமரிப்பு வேலைகள் காரணமாக கொழும்பின் சில பகுதிகளுக்கு 12 மணிநேரத்துக்கு நீர்விநியோகம் இடைநிறுத்தப்படுவதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் இன்று (16) காலை 6.00 மணிமுதல் நாளை (17) மாலை 6.00 மணி வரையான 12 மணித்தியால காலப் பகுதியில் கொழும்பு 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பிரிவுகளுக்கு நீர் விநியோகம் இடைநிறுத்தப்படுகிறது.

# களுத்துறை அஹதிய்யா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா








களுத்துறை அஹதிய்யா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் (14) காலை களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

அஹதிய்யா பாடசாலையின் அதிபர் சிராப் முபஸ்சிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

இதன்போது, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தவிசாளர் உவைஸ் முஹம்மட், ஹைதராபாத் KIMS வைத்தியசாலையின் பொது முகாமையாளர் சுனில் தெஹ்ரி, களுத்துறை நகரசபையின் முன்னாள் தவிசாளர் ஆமிர் நாசிர், களுத்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சர் இனோகா லியானகே, களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபர் நப்றாஸ் நில்பர், களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத் தலைவர் உவைன், செயலாளர் ஹிசாம் சுஹைல் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கனேடியத் தூதுவரை சந்தித்த சிறீதரன் எம்.பி.




இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கனடாவுக்கு அண்மையில் பயணமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் அங்கு கனேடியப் பிரதி அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்த நிலையில், குறித்த சந்திப்புகள் தொடர்பிலும், சமகால அரசியல் நிலைவரம் தொடர்பிலும் பேசப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவினருக்கும் கனேடியத் தூதுவருக்குமிடையிலான சந்திப்பொன்றை ஒழுங்கமைக்குமாறு சிறீதரன் எம்.பி., தூதுவரிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரத்கிந்த நீர்த்தேக்கத்தின் 7 வான் கதவுகள் திறப்பு





உல்ஹிட்டிய - ரத்கிந்த நீர்த்தேக்கத்தின் 7 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதிக மழைவீழ்ச்சி காரணமாக, நீர் மட்டத்தைக் கண்காணிக்கும் பொறியியலாளரின் ஆலோசனைப்படி உல்ஹிட்டிய - ரத்கிந்த நீர்த்தேக்கத்தின் அதிகப்படியான நீரை வெளியேற்றுவதற்காக 7 வான்கதவுகள் 0.5 மீற்றர் வரை திறக்கப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட ஊடகப் பிரிவு தெரிவிக்கிறது.

இதன் காரணமாக ரத்கிந்தயிலிருந்து கிராந்துருக்கோட்டை வரையான வழியில் 'ரத்கிந்த கோசுவ' உட்பட தாழ்நிலப்பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் இருப்பதால் அப்பகுதியில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு நீர்த்தேக்கத்தின் பொறுப்பதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

# தென்கிழக்காசிய கணித ஒலிம்பியாட் போட்டி: இலங்கை சார்பில் நபீல் இல்மா ஸைனப் தெரிவு



தென்கிழக்காசிய கணித ஒலிம்பியாட் போட்டிகள் 28 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒவ்வொரு நாட்டிலும் தனித்தனியாக நடைபெறுகின்றன. இந்தப் போட்டியில் இலங்கை சார்பாக (Paper C) பிரிவில் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட பொலனறுவை முஸ்லிம் தேசிய பாடசாலையில் தரம் 07இல் கல்வி கற்கும் மொஹமட் நபீல் இல்மா ஸைனப் உலகத்தரம் வாய்ந்த போட்டிக்காக நாளை (17) மலேசியா பயணமாகிறார்.

இம்மாணவி கடந்த வருடமும் (Paper B) பிரிவில் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்று சிங்கப்பூருக்கு உலகத்தரம் வாய்ந்த போட்டிக்குச் சென்றமை விசேட அம்சமாகும்.

# ஹிங்குரங்கொட விமான ஓடுபாதையின் மாற்று சோதனை தரையிறக்கம்





ஹிங்குரங்கொட விமான ஓடுபாதையின் மாற்று சோதனை தரையிறக்கத்தை விமானப்படைத் தளபதி மேற்கொண்டார்.

சர்வதேச தரங்களைப் பூர்த்திசெய்வதற்கும் பரவலாகப் பயன்படுத்தப்படும் A320 மற்றும் போயிங் 737 விமான செயற்பாடுகளுக்கு இடமளிப்பதற்கும் ஹிங்குரங்கொட விமான ஓடுபாதையின் மாற்றம் தற்போது நடைபெற்று வருகிறது. முக்கிய பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகு, ஓடுபாதையின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பொறுப்பு விமானப்படைக்கு ஒப்படைக்கப்பட்டது.

விமானப்படையின் வடிவமைப்புகளை மீளாய்வு செய்வதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) நியமிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் இலங்கை விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சரவைப் பத்திரம் மூலம் அத்தியாவசிய வழிகாட்டுதல்கள் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புகளை வெளியிடும்.

இந்தத் திட்டம் 19, ஒகஸ்ட் 2024 அன்று விமானப்படையின் சிறப்புத் திட்ட மேலாண்மைப் பிரிவால் அதிகாரபூர்வமாகத் தொடங்கப்பட்டது.இந்த இலட்சியத் திட்டம் நான்கு தனித்துவமான கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதற் கட்டம் பிரதான ஓடுபாதையின் கட்டுமானத்தில் கவனம் செலுத்துகிறது. இந்தக் கட்டத்தில் ஏழு நிலைகள் உள்ளன. மேலும் ஆரம்ப நிதியொதுக்கீடு ஒன்று மற்றும் இரண்டாம் நிலைகளை முடிக்க உதவியது. இதன் விளைவாக மொத்த 2,500 மீற்றர் ஓடுபாதையில் 850 மீற்றருக்கு நிலக்கீழ் பைண்டர் கோர்ஸ் உருவாக்கப்பட்டது.

இறுதி நிலக்கீழ் அணியும் பாதையைத் தொடர்வதற்கு முன், முடிக்கப்பட்ட 850 மீற்றர் பிரிவில் சோதனை தரையிறக்கத்தை நடத்த RDA ஆலோசகர் குழு பரிந்துரைத்தது. விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவினால் இயக்கப்பட்ட Y-12 விமானம் மூலம் (ஜனவரி 13, 2025) வெற்றிகரமாக சோதனை தரையிறக்கத்தை மேற்கொண்டமை இத்திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. சிறப்புத் திட்ட மேலாண்மைப் பிரிவின் பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் சுமேத சில்வா மற்றும் ஹிங்குரங்கொட விமானப்படைத் தள கட்டளை அதிகாரி எயார் கமடோர் தினேஷ் ஜெயவீர ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஓடுபாதையை மேலும் 850 மீற்றர் நீட்டிப்பதை உள்ளடக்கிய அடுத்த கட்ட கட்டுமானப் பணிகள் 2025 ஜனவரி 15 அன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதோடு ஜனாதிபதியின் ஒப்புதலுடன் இந்தத் திட்டம் 2,500 மீற்றர் ஓடுபாதையை முழுமையாக முடிப்பதே அடுத்த இலக்காகும். இதன்மூலம் பெரிய விமானங்களின் செயற்பாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதை உறுதி செய்கின்றது.








**கொழும்பு-11, புறக்கோட்டை பிரதான வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கி (புறக்கோட்டை) கிளையின் தைப்பொங்கல் நிகழ்வும் வாடிக்கையாளர்களுடனான விஷேட கொடுக்கல் வாங்கலும் கிளையின் முகாமையாளர் திருமதி நில்மினி சந்தரேகா தலைமையில் நடைபெற்றன. பிரதம அதிதியாக பிரதம நிறைவேற்று அதிகாரி மக்கள் வங்கி பொது முகாமையாளர் கலைவ் பொன்சேகா, பிரதி பொது முகாமையாளர் நவீன் பத்திரகே மற்றும் பிராந்திய முகாமையாளர் திருமதி அமிதா சஞ்சீவனி ஆகியோர் கலந்துகொண்டனர்.**

# மட்டு. வாவியில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை: கட்டுப்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும்

## மீன்பிடிச் சங்கங்கள் கோரிக்கை



(வீரமுனை செய்தியாளர்)

மட்டக்களப்பு வாவியில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் மீனினங்கள் அழிவடைகின்றன. இதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மீன்பிடிச் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மட்டக்களப்பு வாவியில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள்,மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் இ.சிறிநாத் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்பு வாவியில் மீன்பிடியில் ஈடுபடும் பல்வேறு மீன்பிடிச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் மட்டக்களப்பு முகத்துவாரத்தில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தின்போது மட்டக்களப்பு வாவியில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடிகள் தொடர்பில் மீனவர் சங்கத்தினால் சுட்டிக்காட்டப்பட்டன.

தடைசெய்யப்பட்ட வலைகள் மட்டக்களப்பு வாவிக்குள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக மீன்கள் அழியும் நிலை ஏற்படுவதுடன் வாவியின் ஓரங்களில் காணப்படும் கன்னா தாவரங்களும் அழிவடைகின்றன. மீனினங்களின் உற்பத்திகள் தடைப்படுகின்றன.

அத்துடன், மட்டக்களப்பு வாவி ஓரங்களை சிலர் நிரப்பி ஹோட்டல்கள் மற்றும் வீடுகளை அமைப்பதன் காரணமாகவும் சில இடங்களில் வீதிகளை அமைப்பதற்கு வாவிகளை நிரப்புவதன் காரணமாகவும் மீன்கள் அழிவடையும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக மீனவர் சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகள் பாவிக்கப்பட்டு சிறிய மீன்கள் பிடிக்கப்படுவதனால் மீன்களின் பெருக்கம் குறைவடைகிறது. இதனால் வாவியில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் எதிர்கால சமூகத்துக்கு சத்துள்ள மீன்களை வழங்கவும் முடியாமல் உள்ளது. இவற்றைத் தடுத்து மீனினங்களைப் பாதுகாத்து எதிர்கால சமூகத்துக்கு வழங்கும் பொறுப்பு அதிகாரிகளுக்கு உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

தங்களது அதிகாரத்துக்குட்பட்ட வகையிலான அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதாகவும் எதிர்காலத்தில் மீனவர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்புடன் சட்டவிரோத மீன்பிடியை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் குரூஸ் மீனவர் அமைப்புகளிடம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து மீன்பிடித்துறை அமைச்சரின் கவனத்துக்கு ஏற்கனவே கொண்டுசென்றுள்ளதாகவும் விரைவில் அமைச்சர் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்து மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயவுள்ளதாகவும் தெரிவித்த சிறிநாத் எம்.பி., அரசாங்கம் மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமெனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

# கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தில் பொங்கல் திருப்பலி





(கல்லடி செய்தியாளர்)

உழுதுண்டு வாழும் தமிழர் பண்பாட்டின் நன்றிப் பெருநாளாம் உழவர் திருநாளைச் சிறப்பிக்கும் விசேட தைத்திருநாள் பண்பாட்டு திருப்பலி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் பாரம்பரிய கலாசார முறையில் செவ்வாய்க்கிழமை (14) ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு - கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்தந்தை லோரன்ஸ் லோகநாதன் அடிகளாரின் ஏற்பாட்டில் அருட்பணி பிலிப் அடிகளார் மற்றும் அருட்பணி ஜோன் யோசப்மேரி அடிகளார் ஆகியோர் இணைந்து குறித்த பண்பாட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

இதன்போது இடம்பெற்ற பண்பாட்டுத் திருப்பலியில் நாட்டில் மதங்களிடையே நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்தும் வகையில் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆசிவேண்டி இவ்விசேட பொங்கல் பண்பாட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவ்விசேட திருப்பலியில் அருட்சகோதரிகள், பங்கு மக்கள் மற்றும் இறை விசுவாசிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை சாஹிராவில் பழைய மாணவர்களின் ஒன்று கூடல்






(கல்முனை செய்தியாளர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி பயின்ற 2009ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரம் மற்றும் 2012ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் (11) நிந்தவூரில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்பமாக சமய அனுஷ்டானத்துடன் தங்களுக்கு போதித்த மரணமான ஆசிரியர்கள், நண்பர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

சிறப்பு அதிதிகளாக அம்மாணவர்கள் கற்ற காலத்தில் தரம் ஆறு தொடக்கம் உயர்தரம் வரை பாடசாலையின் பகுதித் தலைவர்களாக இருந்த ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையின் அதிபர் எம். ஐ.ஜாபிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரையை பழைய மாணவர்கள் சார்பாக எம்.எச்.அப்துல் றஹ்மான் நிகழ்த்தியதுடன் தரம் எட்டு மற்றும் கலைப்பிரிவின் கடந்த கால பகுதித் தலைவரான அப்துல் ஹமீட், வணிகப் பிரிவுப் பகுதித் தலைவர் அபுல் ஹஸன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்),க.பொ.த.(சா/த) பகுதித் தலைவர் டி.எம்.றிபாய் ஆகியோரினால் மாணவர்களின் கடந்தகால நினைவுகளும் சம்பவங்களும் மீட்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஐந்தாவது மேலங்கி அறிமுகமும் அதிதிகளுக்கான நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. மாணவர்கள் சார்பாக ஏ.எம்.எம்.ஹக்கானி நன்றியுரையாற்றினார்.








**மூதூர் கிழக்கு சேனையூர் பிரதேசத்தில் பட்டிப்பொங்கல் நேற்று (15) கொண்டாடப்பட்டது. இதன்போது பொன்னாவரம் பூவால் பசுவுக்கு மாலையிட்டு அலங்காரம் செய்து பலகார மாலை, நெத்திப் பட்டம் என்பன இட்டு அழகுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.**
**(கிண்ணியா செய்தியாளர்)**





**அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, கவடாப்பிட்டி கிராமத்தில் நேற்று(15) காலை பட்டிப் பொங்கல் கொண்டாடப்பட்டது. இதன்போது பசுக்களுக்கு மாலை அணிவித்து பொட்டு வைத்து மங்களகரமாக பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. (திருக்கோவில் மேலதிக செய்தியாளர்)**

# கிழக்கு மாகாண சபையின் தைப்பொங்கல் விழா









(கிண்ணியா, சீனக்குடா செய்தியாளர்கள்)

கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தைப்பொங்கல் விழா கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் செவ்வாய்க்கிழமை(14) நடைபெற்றது.

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வேலூர் மிட்சுயி மீள்குடியேற்றக் கிராம பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாகாண ஆளுநர் செயலக செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே.குணநாதன், மாகாண கலாசாரப் பணிப்பாளர் உட்பட அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





**செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் வருடம் தோறும் இடம்பெறும் பிரதான சடங்குகளில் தைக்குளிர்த்தி சடங்கு செவ்வாய்க்கிழமை(14) வெகுவிமர்சையாக நடைபெற்றது. அந்தவகையில் தைப்பொங்கல் தினத்தன்று மாலை வேளையில் நெல்குற்றுதல் பூஜையுடன் ஆரம்பமாகி விநாயகர் பானை வைத்தல், அம்மன் குளிர்த்திப்பாடல் பாடுதல் போன்ற பாரம்பரிய நிகழ்வுகள் இடம்பெறும். இது ஆலய கட்டாடியார் தேவராசாவினால் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் பெருமளலான பக்தர்கள் கலந்துகொண்டனர். (குருக்கள்மடம் செய்தியாளர்)**





**மூதூர் -கூனித்தீவு பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைப் பட்டிகளில் பொங்கல் பொங்கி நேற்று(15) பட்டிப்பொங்கலைக் கொண்டாடினர். இதன்போது பட்டிகளிலுள்ள மாடுகளுக்கு கழுத்துகளில் பூமாலையிட்டு பலகாரம் செய்து படைத்து, பூஜை செய்து வழிபட்டமை குறிப்பிடத்தக்கது. (மூதூர் செய்தியாளர்)**





**அட்டாளைச்சேனை அல்- முனீறா பெண்கள் உயர் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறவுள்ள அதிபர் ஏ.சீ.நியாஸின் சேவை நலன் பாராட்டும் பிரியாவிடை நிகழ்வும் பாடசாலையில் செவ்வாய்க்கிழமை(14) நடைபெற்றன. பிரதியதிபர் எம்.ரீ.எம்.சியாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லா, பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எச்.பௌஸ், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (கோணாவத்தை செய்தியாளர்)**









பட்டிப்பொங்கல் விழா மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் நேற்று(15) காலை இடம்பெற்றது. பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாகவும் இது கருதப்படுகிறது. இதன்போது பசுக்கள் அலங்கரிக்கப்பட்டு பொங்கல் பொங்கப்பட்டு பசுக்களுக்கு பூஜைகள் நடைபெற்றன. ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ கு.சிற்சபேசன் தலைமையில் இந்த வழிபாடுகள் இடம்பெற்றன. இவ்வழிபாட்டில் பெருமளவான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர். (வீரமுனை செய்தியாளர்)

# நாட்டை தூய்மைப்படுத்த வேண்டியவர்கள் பஸ்களில் தோரணங்களைக் கழற்றி தூய்மைப்படுத்த முயற்சி

## இது அரசு மீதான அதிருப்தியை தெற்கில் ஏற்படுத்தியுள்ளது என்கிறார் சாணக்கியன் எம்.பி.

(வீரமுனை செய்தியாளர்)

''தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துவரும் சில செயற்பாடுகள் தெற்கு மக்களிடையே அதிருப்திகளை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, கள்வர்களையும் கொலைகாரர்களையும் ஊழல்வாதிகளையும் பிடித்து நாட்டைத் தூய்மைப்படுத்த வேண்டியவர்கள் பஸ்களில் தோரணங்களைக் கழற்றி தூய்மைப்படுத்த முனைகின்றனர்'' - என இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

தைப்பொங்கல் பூஜை வழிபாடுகள் மட்டக்களப்பு செட்டிபாளையம் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த சாணக்கியன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக, வடக்கு, கிழக்கு வாழ் மக்களுடைய எதிர்காலம் குறித்தான பாரிய பொறுப்பு எனக்கும் எனது கட்சியான இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் இருக்கின்றது. அந்த வகையில் தை பிறந்தால் வழி பிறக்கும் என்று கூறுவார்கள். கடந்த காலங்களிலும் கூட தை பிறந்தால் எமது தமிழ் மக்களுக்கு சிறந்த எதிர்காலம் கிடைக்குமென்றதன் அடிப்படையில் நாங்கள் அரசியலில் ஈடுபட்டு எங்களுடைய அரசியல் தீர்வு விடயம் மற்றும் எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் போன்ற விடயங்களை முன்னெடுத்திருந்தோம்.

சில விடயங்களை கடந்த காலத்தில் அடையக் கூடியதாக இருந்தது. சில விடயங்களில் முழுமையாகத் திருப்தியடையக்கூடிய நிலையில் காணப்படவில்லையென்றாலும் சில விடயங்களில் முன்னேற்றகரமான நகர்வுகளை முன்னெடுத்திருந்தோம். எந்தவொரு முன்னேற்றமும் இல்லாமல் இருக்கின்ற விடயங்களும் இருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். அதாவது, விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடி துறைகளே நமது மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகின்றது. அந்த வகையில், இந்த மூன்று துறைகளிலும் இருக்கின்ற பல சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்கு முழுமையான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்துக்கு அழுத்தங்களை நாம் வழங்குவோம்.

அதேபோன்று, இந்த வருடத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் எமது மக்கள் முடிவெடுத்ததுபோல வடக்கு, கிழக்கில் வாழும் அனைத்து தமிழ் மக்களும் இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தை இந்தத் தேர்தல்களில் ஆதரிப்பதனூடாக பாரிய அழுத்தங்களை அரசாங்கத்துக்கு வழங்குவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமையும்.

பிரதான அரசியல் கட்சியினூடாகத் தெரிவு



செய்யப்பட்டவர்களுக்கு அந்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய அளவுக்கு அவகாசம் இருக்கின்றதென்பது பற்றிய சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்றது. அந்த வகையில் அவர்களைக் குறைத்து மதிப்பீடு செய்யவில்லை. ஆனால், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை என்பது எமது மக்களது நேரடி தொடர்பாடல் உள்ள இரண்டு திணைக்களங்கள் அல்லது இரண்டு அமைப்புகள். அந்த வகையில் அவற்றினுடைய அதிகாரத்தை இலங்கை தமிழரசுக் கட்சிக்கு தமிழ் மக்கள்ள ஒப்படைக்க வேண்டும். அதற்காக மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய வகையில் எங்களது செயற்பாடுகள் இந்த வருடத்தில் நடைபெறும்''- என்றார்.

# கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் வடிகான்கள் துப்புரவு





(பெரியநீலாவணை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக மருதமுனை மசூர் மௌலானா வீதியின் பிரதான வடிகான் அடைபட்டுள்ளதால் வெள்ள நீர் பாய்ந்தோடுவதில் தடை ஏற்பட்டுள்ளது. இதனால் குறித்த பகுதியில் வாழும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்நிலையில், இதனை அறிந்துகொண்ட ஓய்வுபெற்ற நீதிபதி ரி.எல்.அப்துல் மனாப் தலைமையிலான குழுவினர் உடனடியாக செயற்பட்டு கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த வீதியில் வசிக்கும் பொதுமக்களின் உதவியோடு வடிகான் துப்புரவு செய்யப்பட்டன.

நீண்ட காலமாக அடைபட்டுக் கிடந்த கழிவுநீரும் வெளியேற்றப்பட்டன. சமூகத்துக்கு முன்மாதிரியாக செயற்பட்ட இந்தக் குழுவினருக்கு பலரும் பாராட்டுகளைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாலியல் சேஷ்டை செய்த 69 வயது முதியவர் கைது

(பாறுக் ஷிஹான்)

சிறுமியை பாலியல் சேஷ்டை செய்தமை தொடர்பில் சந்தேகத்தின்பேரில் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை செய்யும் நபரொருவரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரமுனை பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் கடந்த திங்கட்கிழமை (13) இவ்விடயம் குறித்து சிறுமியின் தாயார் முறைப்பாடொன்றை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டுக்கமைய அதிர்ஷ்ட இலாபச்சீட்டு விற்பனை செய்யும் நபரை பொலிஸார் கைதுசெய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் வீரமுனை பகுதியில் வாடகை வீட்டில் தங்கி அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை செய்பவரெனவும் அம்பாறை பகுதியைச் சேர்ந்தவரென்பதும் முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட 09 வயது சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சூழலைப் பாதுகாப்பதாயின் சட்டவிரோத மண் அகழ்வு நிறுத்தப்பட வேண்டும்

## பிரதி அமைச்சர்அருண் ஹேமசந்திரா



திட்டங்களை இனங்கண்டு அபிவிருத்தி செய்கின்றபோது, மாவட்ட மட்டத்தில் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இலகுவானதாக இருக்குமென வெளி விவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறைப் பிரதியமைச்சரும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவர் அருண் ஹேமச்சந்திரா தலைமையில் நேற்று (15) பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது, கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சூழலைப் பாதுகாப்பதாயின் சட்டவிரோத செயலாளர் இணைந்து செயலாற்ற வேண்டும். சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற முடியாது. அரசாங்கத்தினுடைய கொள்கையும் அதுதான். சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறும் இடங்களை அடையாளம் கண்டு, அவை தொடர்பாக பூரணமாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதி அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மேலும், ஊழலை ஒழிக்க வேண்டும். இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் முன்னுரிமை அடிப்படையில் இருப்பது மட்டுமன்றி, அரசியலை இலக்காகக் கொண்டு இடம்பெறக் கூடாதெனவும் தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனியின் நெறியாள்கையின் கீழ் நடைபெற்ற இக்கூட்டத்தில், கரையோர காணி அபகரிப்பு மற்றும் சட்டவிரோத கட்டிடங்கள் என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. மேலும் கிண்ணியா நகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதியில் சீரான மீன் சந்தை இல்லாதது தொடர்பாகவும் இங்கு பேசப்பட்டது. மேலும், குறிஞ்சாக்கேணி பாலம் அமைப்பதற்கு சகல பூர்வாங்க வேலைகளும் நிறைவு பெற்றுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் இங்கு தெரிவிக்கப்பட்டது.

கிண்ணியா நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவு முகாமைத்துவம் தொடர்பாகப் பேசப்பட்டதுடன் கிண்ணியா பிரதேச வைத்தியசாலைகளை தரமுயர்த்துவது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபினால் யோசனை முன்வைக்கப்பட்டது. நான்கு வருடங்களுக்கு முன் இடம்பெற்ற குறிஞ்சாக்கேணி பால அனர்த்தத்தின்போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு இன்னும் கொடுக்கப்படாமை குறித்தும் இங்கு பிரதி அமைச்சர் கேட்டறிந்து கொண்டார். குறிப்பாக, மனித - யானை மோதல், வீதி அபிவிருத்தி, இயற்கை அனர்த்தத்தின் போதான வடிகான் நிலைவரம், சட்டவிரோத மண் அகழ்வு, வடிகான்கள், கல்வி, சுகாதாரம் என பல முக்கிய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின் நடைபெற்ற முதலாவது கூட்டம் இதுவாகும். குறித்த கூட்டத்தில் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், எஸ்.குகதாஸன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட திணைக்களத் தலைவர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பாலமுனை ஜமால் வீதியில் தேங்கியுள்ள வெள்ளநீரை அகற்றி பாதையை சீர்செய்து தருமாறு கோரிக்கை

(திராய்க்கேணி செய்தியாளர்)

பாலமுனை 5ஆம் பிரிவில் சுமார் 75க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்கள் பயன்படுத்துகின்ற ஒரேயொரு பாதையாக ஜமால் வீதி காணப்படுகிறது. அவ்வீதியில் மழை காரணமாக வெள்ள நீர் தேங்கி வழிந்தோடாத நிலையில் காணப்படுகின்றது.

இது சம்பந்தமாக பிரதேச சபையின் செயலாளருக்கு அறிவித்த நிலையில், அவரும் தொழில்நுட்ப உத்தியோகத்தரும் இவ்விடத்தைப் பார்வையிட்டனர். இருந்தும் நீரை அகற்றுவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தித் தரவில்லை. அதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட வீதியைப் பயன்படுத்தும் அனைவரும் போக்குவரத்து செய்வதில் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.



எனவே, இந்த இடத்திலுள்ள நீரை அகற்றுவதற்கான வழிமுறையைக் கண்டறிந்து உடன் தீர்வு வழங்குமாறு பாடசாலை மாணவர்களின் பெற்றோரும் அப்பாதையைப் பயன்படுத்தும் ஏனையோரும் கேட்டுக்கொள்கின்றனர்.

# வந்தாறுமூலை பல்கலைக்கு முன்னால் வாகன விபத்து: மாணவர்கள் மூவர் உட்பட நால்வர் படுகாயம்: சாரதி கைது

(கனகராசா சரவணன்)

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாலுள்ள பாதசாரிக் கடவையில் செவ்வாய்க்கிழமை(14) இடம்பெற்ற விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில், பஸ் சாரதியைக் கைதுசெய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் கல்விகற்றுவரும் மாணவர்கள் மூவர் அன்றையதினம் இரவு 10.45 மணியளவில் செங்கலடியிலிருந்து பல்கலைக்கழக விடுதிக்கு முச்சக்கரவண்டியில் பயணித்து பல்கலைக்கழகத்தின் எதிர்ப்பக்கமாகவுள்ள விடுதிப் பக்கம் முச்சக்கரவண்டியை திருப்பும்போது கல்முனையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் முச்சக்கரவண்டியுடன் மோதியது. இதன்போது முச்சக்கர வண்டியில் பயணித்த பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து அவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டதுடன் பஸ் சாரதியையும் கைதுசெய்யப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கடவுச்சீட்டு அலுவலகமொன்று தேவை: திருகோணமலை மக்கள் கோரிக்கை

(தம்பலகாமம் செய்தியாளர்)

குடிவரவு - குடியகல்வுத் திணைக்கள உப அலுவலகமொன்றை திருகோணமலை மாவட்டத்தில் அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரவிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இம்மாவட்ட மக்கள் கடவுச் சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு மற்றும் வவுனியாவுக்கு பல ரூபாவைச் செலவளித்து பல கிலோமீற்றர் தூரம் செல்லவேண்டியுள்ளது. இம்மக்களின் நலன்கருதி இம்மாவட்டத்தில் அலுவலகத்தை அமைத்துத் தந்தால் தமது வேலைகளை இலகுவாக முடித்துக் கொள்ளமுடியுமென மக்கள் கூறுகின்றனர்.

எனவே, பிரதியமைச்சர் மேற்படி கோரிக்கையை கருத்திலெடுத்து மிக விரைவில் குடிவரவு - குடியகல்வுத் திணைக்கள அலுவலகமொன்றை திருகோணமலையில் திறந்துவைக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மண்டூர் - வெல்லாவெளி வீதியை ஊடறுக்கும் பாதையில் வெள்ளநீர்

## போக்குவரத்துக்கு பாதிப்பு





(குருக்கள்மடம் செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் குளங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளதையடுத்து, நவகிரி குளத்தின் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.இதனால் மண்டூர் - வெல்லாவெளி பிரதான வீதியால் வெள்ள நீர் ஊடறுத்துச் செல்வதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அச்சத்துடன் பயணிக்கவேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

தற்போது மாணவர்களுக்கு 03ஆம் தவணைப் பரீட்சை இடம்பெறுவதனால் வேத்துச்சேனை, மண்டூர் பிரதேசங்களிலிருந்து வெல்லாவெளி பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே,இவ்வீதியில் நிரந்தரமான பாலமொன்றை அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# புலிபாய்ந்தகல் பாதையில் நீர்மட்டம் உயர்வு: போக்குவரத்துக்குத் தடை

## அவதானமாக இருக்குமாறு அறிவிப்பு

(கல்லடி செய்தியாளர்)

கிரான் பிரதேச செயலகப் பிரிவின் புலிபாய்ந்தகல் பாதையில் நீர்மட்டம் உயர்ந்திருப்பதால் அந்தப் பாதையூடான போக்குவரத்துக்காக இயந்திரப் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், அதில் குறிப்பிட்டுள்ளதாவது, மாவட்டத்தின் சில குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் ஆற்றை அண்டிய பிரதேசங்கள் மற்றும் தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருப்பதுடன் கடல், ஆறு, குளம் போன்ற நீர் நிலைகளில் நீராடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். மேலும், மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களும் மிக அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## தொழில்நுட்பம் - நிலைத்தன்மை இணைந்ததாக முன்னோடி 2025 நாட்காட்டியை வெளியிட்ட NDB



NDB வங்கியானது தனது 2025 நாட்காட்டியை அறிமுகப் படுத்தியதன் மூலம் பாரம்பரிய நேரக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை மீண்டும் ஒருமுறை மீள்வரையறை செய்துள்ளது. வங்கியின் இந்தப் புதுமையான உருவாக்கமானது ஒரு நிலையான எதிர்காலத்தை விரிவுபடுத்தும் வகையில் அதி நவீன டிஜிட்டல் தொழில்நுட் பத்தை ஒருங்கிணைக்கிறது.

NDB யின் 2025 நாட்காட்டி Pal இன் சிறப்பம்சம் என்னவென் றால் செயற்கை நுண்ணறிவால் [AI] செயற்படுத்தப்படும் மெய்நிகர் உதவியாளராக இது ஊடாடலின் எல்லைகளைத் தொடர்கிறது. இருப்பினும், இந்த ஆண்டு நாட்காட்டியானது ஓர்அற்புதமான ஜப்பானிய காகித சிற்பக்கலையான ஓரிகமி பயணத்தினூடாக பயனர்களை வழிநடத்துவதன் மூலம் ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கிறது. ஒவ்வொரு மாதத்தின் பக்கமும் எளிய QR குறியீடு ஸ்கேன் மூலம் நாட்காட்டி Pal ஆல் வழங்கப்படும் காகித சிற்ப அறிவுறுத்தல்கள் ஒரு சிக்கலான ஓரிகமி உருவாக்கமாக மாறும். இந்தப் படைப்புகள் வெறும் கலை சார்ந்தவை அல்ல, படைப்பாற்றல் மூலம் உருவாக்கப்படும் ஒவ்வொரு படைப்பும் ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் (UNSDGs) இணைக்கப்பட்ட கதையைச் சொல்கிறது.

இந்தப் புதுமையான படைப்பைக் கொண்டாடும் வகையில் வங்கியானது நவம் மாவத்தையில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் ஓர் உற்சாகமான நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது .

## சுழற்சிப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக கழிவிலிருந்து மதிப்பைத் தோற்றுவிக்கும் முயற்சி



GIZ, கொகா-கோலா, நெஸ்லே, யூனிலீவர் மற்றும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் அமைச்சு ஆகியவற்றுக்கிடையிலான அரச-தனியார் கூட்டாண்மையின் கீழான முயற்சி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளது.

ஜேர்மன் அபிவிருத்தி அமைச்சின் (German Development Ministry - BMZ) சார்பில், Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) (GIZ) மற்றும் கொகா-கோலா, நெஸ்லே, யூனிலீவர் ஆகிய இலங்கை யில் விரைவாக விற்றுத் தீரும் நுகர்வோர் பொருட்கள் சார்ந்த (FMCG) மூன்று முன்னணி நிறுவனங்கள், பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்ளூராட்சி அதிகார சபைகள் அமைச்சு ஆகியவற்றுக்கு இடையிலான அரச-தனியார் கூட்டாண்மையொன்றுடன் (PPP), பிளாஸ்ரிக் மாசுபாடு தொடர்பான தற்போதைய பிரச்சினைகளைக் கையாள்வதற் காக 'கழிவிலிருந்து மதிப்பு' (Waste to Value) என்ற பெயர் கொண்ட முயற்சி முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இந்த அரச-தனியார் கூட்டாண்மையின் பிரதான நோக்கம், பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரித்து, தரம் பிரித்து, மீள்சுழற்சி செய்து மற்றும் மீள்பயன்பாட்டுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கும் உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் அதேசமயம், பொறுப்புணர்வுடன் கழிவுகளை அப்புறப்படுத்துவது வாழ்வாதாரங்களுக்கும் சூழலுக்கும் எவ்வாறு மதிப்பைச் சேர்ப்பிக்கின்றது என்பது குறித்த விழிப்புணர்வைத் தோற்றுவிப்பதன் மூலமாக, சுழற்சிப் பொருளாதாரத்தை நோக்கிய நடத்தை மாற்றத்தை முன்னெடுப்பதாகும். பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்ளூராட்சி அதிகார சபைகள் அமைச்சின் கூட்டாண்மையுடன், மேல் மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகள் மத்தியில் பிளாஸ்ரிக் கழிவுகளின் பரிமாணத்தை விளங்கிக் கொள்வதற்காக, 49 உள்ளூராட்சி சபைகளில் அடிப்படை ஆய்வொன்று முன்னெடுக்கப்பட்டது. முழுமையான ஆய்வைத் தொடர்ந்து, கம்பஹா, கெஸ்பாவ, ஹோமாகம மற்றும் தெகிவளை ஆகியவற்றை உள்ளடக்கிய நான்கு முக்கிய உள்ளூராட்சி அதிகார சபைகள் இச்செயற்றிட்டத்துக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## Colombo Motor Show-2024இல் வெற்றியை பதிவுசெய்த செலான் வங்கி



செலான் வங்கி, Colombo Motor Show 2024 உடன் தொடர்ந்து ஏழாவது தடவையாக அதன் உத்தியோகபூர்வ வங்கி மற்றும் லீசிங் பங்குதாரராக பெருமிதத்துடன் இணைந்து வாகன ஆர்வலர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான நிதிப் பங்காளியாக அதன் நிலையை மேலும் உறுதிப்படுத்தியது.

டிசம்பர் 06 முதல் 08 வரை BMICHஇல் நடைபெற்ற இந்த நிகழ்வில் 60,000இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் மோட்டார் தொழிற்றுறையின் எதிர்காலத்தில் முக்கிய பங்கு வகிக்கவுள்ள மின்சார வாகனங்கள் (EVகள்) தொடர்பாக கவனத்தை செலுத்தியதுடன் மோட்டார் தொழிற்றுறையின் சமீபத்திய போக்குகளை ஆராய்ந்தனர்.

செலான் வங்கி அதன் Fast Track லீசிங் வசதிகளை அறிமுகப்படுத்தியதுடன் வாடிக்கையாளர்கள் எரிபொருள் அல்லது மின்சாரப் பாவனை உடைய தங்கள் கனவு வாகனங்களை 24 மணி நேரத்துக்குள் பெற உதவியது. அதன் சலுகையை மேலும் உயர்த்த, வங்கி சிறப்பு வட்டி வீதங்கள் மற்றும் செயலாக்க கட்டணத்தில் 50% தள்ளுபடியை அறிமுகப்படுத்தியது. அத்துடன் வங்கி, அவசரகால பணத் தேவைகளை தடையின்றி வழங்கும் அதன் புதுமையான Speed Drive உடனடி பண வசதியை இந்நிகழ்வின் போது ஊக்குவித்தது. உங்கள் வாகனக் கனவுகளை முன்னோக்கி நகர்த்த தேவையான லீசிங் தீர்வுகள் மற்றும் நிதி தயாரிப்புகள் பற்றிய மேலதிக தகவலுக்கு, 011-200 88 88 என்ற செலான் வங்கியின் விசேட எண்ணை அழைக்கவும்.



**Hemas Consumer Brands (HCB) நிறுவனம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தோடு இணைந்து, கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 5000 குடும்பங்களுக்கு க்ளோகார்ட் பற்பசை, பேபி செரமி டயபர்கள், வெல்வெட் சவர்க்காரம், டென்டெக்ஸ் ஷாம்பு, குமாரிகா ஹெயார் ஒயில் மற்றும் தீவா ப்ரஸ் சலவைத் தூள் உள்ளிட்ட பொருட்களை நன்கொடையாக வழங்கியபோது...**



**கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்றதிகாரி சனத் மனதுங்க முகாமைத்துவத்தில் பெண்கள் அமைப்பின் (WIM) சிறந்த 10 பன்முகத்தன்மை தலைவர்களுக்கான வெற்றியாளர்களின் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டு விருதைப் பெற்றபோது.**

## பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் தலைவராக பேராசிரியர் அஜந்த சமரக்கோன் நியமனம்



வங்கி அல்லாத நிதிச் சேவைகளில் முன்னோடியான பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, தனது பணிப்பாளர் சபையின் தலைவராக பேராசிரியர் அஜந்த சமரக்கோன் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து, 2024 டிசம்பர் 31 முதல் இந்நியமனம் அமுலுக்கு வந்துள்ளது. தொழில் வல்லுநரான பேராசிரியர் சமரக்கோன் , தனது புதிய பணிப்பொறுப்புக்கு செழுமையான நிபுணத்துவம் மற்றும் தலைமைத்துவத்தை சேர்க்கவுள்ளதுடன், கல்வி, தொழில் மற்றும் பொதுச் சேவையில் அவரது திறமைமிக்க தொழில் வரலாறு இதற்கு ஆதாரமாகவுள்ளது. அவரது நியமனம், பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் புதிய அத்தியாயமொன்றுக்கான சமிக்ஞையாகக் காணப்படுவதுடன், நிதிச் சேவைகள் துறையில் புத்தாக்கம் மற்றும் மகத்துவத்துக்கான தனது நன்மதிப்பை நிறுவனம் தொடர்ந்தும் கட்டியெழுப்பும்.

பேராசிரியர் சமரக்கோன், தற்போது களனி பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் வர்த்தக மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவில் பேராசிரியாக சேவையாற்றி வருகின்றார். அவர் அதே பல்கலைக்கழகத்தில் வர்த்தக கலைமாணி (விசேட) பட்டத்தையும் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். செக் நாட்டின் கல்வி, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் பிரசித்திபெற்ற சர்வதேச மயமாக்கல் மேம்பாட்டு புலமைப்பரிசிலின் உதவியுடன், செக் குடியரசிலுள்ள Tomas Bata பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ மற்றும் பொருளியல் பீடத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். கலாநிதிப் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு வழிகாட்டல், ICBI 2017 இன் இணைத்தலைமை அடங்கலாக, சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றிய ஆழமான அனுபவம் உள்ளிட்ட கல்வியியல் சாதனைகளுக்குப் புறம்பாக, CMA-Australia மற்றும் இலங்கை Association of Accounting Technicians (AAT) ஆகியவற்றின் அங்கத்தவராகவும் பேராசிரியர் சமரக்கோன் உள்ளார்.

கல்வித்துறைக்கு அப்பால், நிதி மற்றும் கல்வி ஆகிய இரண்டுக்கும் பேராசிரியர் சமரக்கோன் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளார். கணக்காய்வு மேற்பார்வையாளராக அவர் கொண்டுள்ள மூன்று ஆண்டு கால அனுபவம், நிதியியல் நிர்வாக ஆட்சி மற்றும் செயற்பாட்டு மேற்பார்வையில் அவருக்கு வலுவான அத்திவாரத்தை வழங்கியுள்ளது. அர்ப்பணிப்பு மிக்க ஆசானாக, 2006ஆம் ஆண்டு முதல் க.பொ.த உ/த பரீட்சைக்கான பிரதம பரீட்சகராகவும் சேவையாற்றியுள்ளதுடன், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் கற்கைநெறி மேம்பாட்டில் அவர் முக்கிய பங்கு வகித்துள்ளார். இலங்கையில் உயர் கல்வியின் தராதரங்களை உயர் மட்டத்தில் பேணியமைக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர நிர்ணய மற்றும் சான்று அங்கீகார பேரவையிடமிருந்து அவருடைய சேவைக்கும் முயற்சிகளுக்கும் சிறந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் புதிய தலைவராக, இலங்கையில் வங்கி அல்லாத நிதிச் சேவைகள் துறையில் நம்பிக்கைக்குரிய முன்னோடியாக தொடர்ந்தும் திகழ்வதை உறுதி செய்து, புத்தாக்கம், நிலைபேற்றியல் மற்றும் தொடர்ச்சியான மகத்துவம் ஆகியவற்றின் பக்கபலத்துடன் நிறுவனத்தை தொடர்ந்தும் சிறப்பாக வழிநடத்திச் செல்லும் தகைமையையும் அனுபவத்தையும் பேராசிரியர் சமரக்கோன் கொண்டுள்ளார்.

## 2024 TAGS விருது வழங்கும் நிகழ்வில் வெண்கலப் பதக்கம் வென்ற HNB FINANCE





இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்ட TAGS விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் Shangri-La ஹோட்டலில் பிரமாண்டமாக நடைபெற்றதுடன் HNB FINANCE வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் பிரிவில் வெண்கல விருதை (20 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான குழும சொத்துக்களுடன்) வென்றது. TAGS விருது வழங்கும் நிகழ்வில் HNB FINANCE தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் நிதி அறிக்கையிடல் மற்றும் பெருநிறுவன வெளிப்படைத்தன்மையில் சிறந்து விளங்குவதை அங்கீகரிக்கிறது. இந்த விருதின் மூலம், HNB FINANCE ஆனது வங்கி அல்லாத நிதி நிறுவனங்களிடையே அதன் சிறப்பை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்த முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிதித் துறையின் நிலையை உயர்த்துவதற்காக நிதி அறிக்கை தரநிலைகள் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றுக்கான HNB FINANCE இன் அர்ப்பணிப்பு TAGS விருது வழங்கும் விழாவில் அங்கீகரிக்கப்பட்டது. இதன் மூலம் நிறுவனத்தின் சிறப்புக்கான அர்ப்பணிப்பு மற்றும் உயர்தர நிறுவனமாக HNB FINANCE இந்நடவடிக்கைகளை அங்கீகரிக்கிறது.







**பொலிஸாருக்கு போக்குவரத்து சமிக்ஞை பலகைகள் மற்றும் கூம்புகள் வழங்கும் நிகழ்வில் சியெட் களனியின் பிரதம செயற்பாட்டதிகாரி திரு ஷமல்குணவர்தன, கறுவாத்தோட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆலோக பண்டார மற்றும் பரிசோதகர் சுராஜ் அபேசேகர ஆகியோரும் இராணுவ பொலிஸாருக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் சியெட் களனி பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் திரு ஷியாங் வோங், SLCMP யின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரி கர்னல் ஈ.எம்.ஐ. ஏக்கநாயக்க மற்றும் ஏனைய அதிகாரிகள் பங்கேற்றனர்.**

## BBNJ எனப்படும் உலகளாவிய கடல்சார் ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதி

தேசிய நீதிமன்ற வரம்புக்கு அப்பால் கடல்சார் உயிரியல் பன்முகத்தன்மை பற்றிய ஒப்பந்தம் (BBNJ) எனப்படும் உலகளாவிய கடல்சார் ஒப்பந்தத்தில் கையொப்பமிட வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் மூலம் பரிந்துரைக்கப்பட்டதுடன், அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியமைக்கு Greenpeace South Asia அமைப்பு தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

(01) இது ஒழுங்குமுறைக்கு அப்பாற்பட்ட சர்வதேச கடல் பகுதிகளில் மனித நடவடிக்கைகளினால் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் பிரதேசங்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முக்கிய ஒரு மைல்கல்லாகும்.

"முக்கியமாக இந்தியப் பெருங்கடல் கடலோரப் பகுதிக்கான சங்கத்தின் (IORA) தலைவர் என்ற அடிப்படையில் எமது கடல்களின் சிறந்த முறையில் பராமரிப்பதற்கு முன்னுரிமை வழங்குவதற்கு இலங்கையின் தலைமைத்துவம் செயலாற்றுவது பற்றி எமது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த செயல்களினால் குறிப்பிடுவது யாதெனில், கடல்சார் உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாப்பதற்காக நாடுகளுக்கிடையில் ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக இலங்கை கடினமாக உழைக்கின்றது" என Greenpeace South Asia அமைப்பின் இலங்கை விளம்பர செயற்பாட்டாளர் திருமதி அனீகா பெரேரா கூறினார்.

இவ்வாறு உலகளாவிய கடல்சார் ஒப்பந்தம் என பொதுவாக அறியப்படும் BBNJ ஒப்பந்தத்துக்கு அனுமதி வழங்கியதனால் பெருங்கடல் பகுதிகளை பராமரிப்பதை ஆதரிக்கும் அதே வேளையில் நிலையான மீன்பிடி மேலாண்மையை மேம்படுத்துவதற்கும் கடல்சார் அறிவியல் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்கும் இலங்கைக்கு வாய்ப்பு காணப்படுகின்றது. சர்வதேச கடல்பரப்பில் கடல்வளங்களை அதிக அளவில் சுரண்டல், வாழ்விடங்களை அழித்தல் மற்றும் உயிரியல் பன்முகத்தன்மையை இழத்தல் ஆகிய விடயங்கள் பற்றி கண்ணோட்டம் செலுத்தும் பட்சத்தில் இந்த ஒப்பந்தத்துக்கு அனுமதி கிடைப்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும்.

இவ் ஒப்பந்தம் கரையோரத்தில் ஆரம்பித்து 200 கடல் மைல்கள் (370 கிலோமீற்றர்) அப்பால் இருக்கும் பெருங்கடலின் பெரும் பிரதேசத்தை பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக மாற்றக் கூடிய ஓர் உறுதியான பொறிமுறையாகும்.

(02) அதனோடு அதிக அளவில் மீன் பிடித்தல் மற்றும் சுற்றுச் சூழல் மாசடைதல் காரணமாக அச்சுறுத்தலுக்கு ஆளாகின்ற இப்பிரதேசத்தின் கடல்சார் சூழல் மெதுமெதுவாக பழைய நிலைமைக்கு திரும்புவதற்கு இதன் மூலம் வழிவகுக்கப்படுவதுடன், சிறந்த கடல்சார் சுற்றுச்சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு இவ் ஒப்பந்தம் மிகவும் உதவியாக இருக்கும். சாதகமான கடல்சார் சூழல் ஓர் நாட்டின் நிலையான காலநிலைக்கு மட்டுமே அவசியமான ஒரு விடயமல்ல. உலகளாவிய ரீதியில் பார்க்கும் பட்சத்தில், நாட்டின் கரையோர மக்கள், மீனவர்கள் மற்றும் மாலுமிகள் உள்ளாக பல மில்லியன் கணக்கான மக்களுக்கு நிலையான வாழ்க்கை தரத்தை உருவாக்குவதற்கு அத்தியாவசியமாகும்.

# ஆஸி.யுடனான டெஸ்ட் தொடரை இழக்கும் நிசங்க?



நியூஸிலாந்து அணியுடன் அண்மையில் நிறைவடைந்த மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியின்போது உபாதைக்குள்ளான இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பெத்தும் நிசங்க அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள 02 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவது சந்தேகத்துக்கிடமாக உள்ளது.

மூன்றாவது ஒருநாள் போட்டியில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்த பெத்தும் நிசங்க உபாதைக்குள்ளாகி தற்காலிக ஓய்வு கோரி தங்கும் அறைக்குத் திரும்பினார். அவர் மீண்டும் துடுப்பெடுத்தாடி தனது எண்ணிக்கைக்கு மேலும் 16 ஓட்டங்களைச் சேர்த்து 66 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஆனால், உபாதையிலிருந்து அவர் முழுமையாக குணமடையாததால் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அவர் விளையாடுவது சந்தேகத்துக்கு இடமாகியுள்ளது. அவருக்கு பதிலாக பெரும்பாலும் இளம் துடுப்பாட்ட வீரர் நிஷான் மதுஷ்க ஆரம்ப வீரராக அணியில் இணைக்கப்படுவார் என நம்பப்படுகிறது.

கடந்த 2023 மார்ச் மாதம் டெஸ்ட் அறிமுகம் பெற்ற நிஷான் மதுஷ்க, 10 டெஸ்ட் போட்டிகளில் ஓர் இரட்டைச் சதத்துடன் 571 ஓட்டங்களை மொத்தமாக பெற்றுள்ளார்.

# இலங்கை – ஆஸி. அணிகளுக்கிடையில் இரு ஒருநாள் போட்டிகள்

## உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானது



(அகீல் சிஹாப்)


சுற்றுலா அவுஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கிடையில் இரு ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் குறித்த போட்டிகள் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் பகல் ஆட்டங்களாக நடைபெறவுள்ளதாகவும் உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று இலங்கை கிரிக்கெட் சபையினால் வெளியிடப்பட்டது.

பெப்ரவரியில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு தயாராகும் வகையில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய அணி மேலதிகமாக ஒருநாள் போட்டி ஒன்றை நடத்துவதற்கு இலங்கைக் கிரிக்கெட் சபையை கோரியது.

இதனை ஏற்றுக்கொண்ட இலங்கை கிரிக்கெட் சபை மேலதிகமாக ஒரு போட்டியை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. முன்னதாக ஒருநாள் போட்டியொன்று பெப்ரவரி 13ஆம் திகதி பகலிரவு போட்டியாக ஹம்பாந்தோட்டையில் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், தற்போது மேலும் ஒரு போட்டி இணைக்கப்பட்டு குறித்த இரு ஒருநாள் போட்டிகளும் பெப்ரவரி 12 மற்றும் 14ஆம் திகதிகளில் கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் பகல் ஆட்டங்களாக நடைபெறவுள்ளது. குறித்த மைதானத்தில் ஒளி விளக்குகள் மறுசீரமைக்கப்படுவதன் காரணமாகவே பகல் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குறித்த சுற்றுப்பயணத்தில் முதலில் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் எதிர்வரும் 29ஆம் திகதி காலியில் ஆரம்பமாகிறது. குறித்த தொடரில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய அணி எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கை வருகிறது.




Media Release

15th January 2025

Australia Tour of Sri Lanka 2025

Sri Lanka Cricket wishes to announce that the upcoming Australia Tour of Sri Lanka 2025 will see two ODIs played, instead of one as earlier announced.

The decision was taken in consultation with Cricket Australia.

Accordingly, the tour will consist of a two-match test series and two ODIs.

The Australians will arrive in Sri Lanka on 24th January 2025.

Revised schedule

| DATE | MATCH | VENUE | TIME |
|---|---|---|---|
| 29th January to 02nd February 2025 | First Test Match | GICS, Galle | Day |
| 06th to 10th February 2025 | Second Test Match | GICS, Galle | Day |
| 12th February 2025 | First ODI | RPICS, Colombo | Day |
| 14th February 2025 | Second ODI | RPICS, Colombo | Day |

# தீயில் கருகிய பத்து ஒலிம்பிக் பதக்கங்கள்



அமெரிக்காவின் கலிஃபோர்னியா காட்டுத் தீயில், அமெரிக்காவைச் சேர்ந்த நீச்சல் வீரர் ஒருவர் 10 ஒலிம்பிக் பதக்கங்களை பறிகொடுத்துள்ள சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் கட்டுக்கடங்காமல் பரவி வரும் காட்டுத் தீ, பல ஆயிரம் வீடுகளை தீக்கிரையாக்கியது. இந்த தீ விபத்தில் பல கோடி ரூபா மதிப்பிலான உடைமைகளை ஏராளமானோர் இழந்துள்ளனர்.

அந்தவகையில் அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் நீச்சல் வீரர், கேரி ஹால் ஜூனியர் 10 ஒலிம்பிக் பதக்கங்களை காட்டுத் தீயில் பறிகொடுத்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளார்.

தீ வேகமாக பரவியதால் சில தனிப்பட்ட பொருட்களையும் நாய் ஒன்றை மட்டுமே தன்னால் பாதுகாக்க முடிந்ததாகவும் உயிரை காப்பாற்றிக்கொள்ள ஓடியபோது, ஒலிம்பிக் பதக்கங்களை பற்றி நினைத்துப் பார்க்க முடியவில்லை என்று கூறியுள்ளார். பதக்கங்கள் இல்லாமல் தன்னால் வாழ முடியும் என்றும் அத்தனை அரிய புகைப்படங்களையும் இழந்துவிட்டதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

1996, 2000, 2004 ஆகிய 03 ஒலிம்பிக் நீச்சல் போட்டிகளில் பங்கேற்ற அவர், 05 தங்கம், 03 வெள்ளி, 02 வெண்கலப் பதக்கங்களை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சம்பியன்ஸ் கிண்ணம் வரை இந்திய அணியின் தலைவராக தொடரும் ரோஹித்



பாகிஸ்தானில் மற்றும் டுபாயில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் வரை இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக ரோஹித் சர்மாவே தொடர்வார் என்றும் அடுத்த தலைவராக ஜஸ்பிரித் பும்ராவை நியமிப்பது தொடர்பாக ஆலோசனை நடைபெற்று வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் கடந்த சில தொடர்களில் ரோஹித் சர்மாவின் ஃபார்ம் மோசமாக உள்ளது. அவரது தலைமையிலான பல போட்டிகளில் இந்திய அணி தோல்வி கண்டது. மேலும் அவரது துடுப்பாட்டமும் மோசமாகி யுள்ளது. இதுதொடர்பாக விமர்சகர்கள் வெளிப்படையாகவே விமர்சித்து வருகின்றனர். இதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பார்டர்-கவாஸ்கர் டிராபி போட்டித் தொடரின் கடைசி டெஸ்ட் போட்டியில் ரோஹித் சர்மா பங்கேற்கவில்லை.

இந்நிலையில் மும்பையில் நடைபெற்ற பி.சி.சி.ஐ சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்தில் தலைமை பதவியிலிருந்து ரோஹித்தை மாற்றுவது தொடர்பாக விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

ஆனாலும், சம்பியன்ஸ் கிண்ணம் வரை ரோஹித்தே இந்திய அணியின் தலைவராக தொடர்வார் என்றும் அதன் பிறகு வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவை தலைவராக நியமிப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தப்படும் என்றும் பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்தன.

2024ஆம் ஆண்டில் ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி 06 டெஸ்ட் போட்டிகளில் தோல்வி கண்டது. இதில் 04 போட்டிகள் உள்நாட்டில் நடைபெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பெப்ரவரி 19 முதல் மார்ச் 09 வரை நடை பெறு கிறது.

# ஹொன்சியன் பிரீமியர் லீக் அடுத்த மாதம் ஆரம்பம்

(தனராஜா)

டிக்கோயா ஹொன்சி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மலையப்பன் சவால் கிண்ண ஹொன்சியன் பிரீமியர் லீக் போட்டி இம்முறையும் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது.

குறித்த பிரிமியர் லீக் போட்டிகள், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம்,16ஆம் திகதிகளில் டிக்கோயா, டி.எம்.சி.சி மைதானத்தில் நடைபெறவுள்ளன. ஆண், பெண் இருபாலாருக்குமான மென்பந்துப் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி ஆகியன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஹொன்சியன் பிரீமியர் லீக் போட்டிகள் ஏற்கனவே இரு தடவைகள் மிகவும் சிறப்பான முறையில் நடந்து முடிந்துள்ள நிலையில், இம்முறை புதிய மாற்றங்களுடன் பிரமாண்டமாக இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு ஹொன்சி கல்லூரி பழைய மாணவர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

# விளையாட்டுத் துளிகள்

2028ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸில் நடக்கும் ஒலிம்பிக் கிரிக்கெட்டில் விளையாட விரும்புகிறேன். அது நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். டெஸ்ட் கிரிக்கெட்டில் எவ்வளவு தூரம் செல்கிறேன் என்று பார்ப்போம். குறுகிய வடிவங்களான ரி20, ஒருநாள் போட்டிகளில் விளையாட விரும்புகிறேன். எப்போது முடிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். ஆனால், உங்களுக்குத் தெரியாது என ஆஸி. கிரிக்கெட் வீரர் ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

2025 ஐ.பி.எல். தொடரில் ஐ.சி.சி. நடத்தை விதிமுறைகள் பின்பற்றப்படும் என ஐ.பி.எல். நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது. ஐ.சி.சியின் படிநிலை 1, படிநிலை 2 அல்லது படிநிலை 3 ஆகியவற்றின் கீழ் விதிக்கப்படும் அபராதங்கள் இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரிலிருந்து பின்பற்றப்படும். இதுவரை ஐ.பி.எல். தொடரில் அதற்கென தனியாக விதிமுறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. ஆனால், தற்போது ரி20 சர்வதேசப் போட்டிகளின் விதிமுறைகளை ஐ.பி.எல். தொடரிலும் பின்பற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

மும்பையில் நடைபெற்ற இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்தில், பி.சி.சி.ஐ. செயலாளராக தேவ்ஜித் சைக்கியாவும் பொருளாளராக பிரப்தேஜ் சிங் பாட்டியாவும் போட்டியின்றி தெரிவானதாக அறிவிக்கப்பட்டது. குறித்த பதவிகளுக்கான தேர்தலில் வேறு எவரும் விண்ணப்பிக்காத நிலையில் இவர்கள் போட்டியின்றி தெரிவாகினர்.

# கராத்தே சுற்றுப்போட்டியில் சிறைச்சாலைகள் திணைக்களம் வெற்றி




இலங்கை சோட்டோக்கான் கராத்தே சங்கத்தினரால் கடந்த சனிக்கிழமை (11) கொழும்பு ரோயல் மாஸ்க் அரேனா உள்ளக அரங்கில் நடத்தப்பட்ட தேசிய மட்டத்திலான கராத்தே சுற்றுப்போட்டியில் பல மாவட்டங்களில் இருந்தும் பல கழகங்கள், தனிநபர்கள் என பலர் போட்டியில் கலந்துகொண்டபோதிலும் இம்முறை வரலாற்றில் முதன்முதலாக சிறைச்சாலை திணைக்களத்தை மையப்படுத்திய வீரர்களும் இப்போட்டியில் பங்குபற்றியிருந்தனர்.

இதில் 09 வீரர்களும் தலா மூன்று தங்கம், மூன்று வெள்ளி, மூன்று வெண்கலம் என ஒன்பது பதக்கங்களைப் பெற்று சிறைச்சாலை திணைக்களத்துக்குப் பெருமை சேர்த்தனர்.

இதற்காக தனது முழு அர்ப்பணிப்பையும் வழங்கிய சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் (பிரதான பயிற்றுவிப்பாளர்) மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர் தேவகாந்தன் பிரசாத் (பயிற்றுவிப்பாளர்) ஆகியோருக்கு தமது நன்றிகளை சிறைச்சாலை சக பணியாளர்கள் தெரிவித்தனர்.

# 42 நிமிடங்களில் 101 மில்லியன் யூரோ உழைத்த நெய்மர்




பிரேஸிலை சேர்ந்த நட்சத்திர உதைபந்து வீரர் நெய்மர் 2024ஆம் ஆண்டில் 02 போட்டிகளில் சேர்த்து 42 நிமிடங்கள் மட்டுமே விளையாடி 101 மில்லியன் யூரோ சம்பாதித்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இது உதைபந்து உலகில் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி யுள்ளது.

நெய்மர் கடந்த 2023ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி.யில் இருந்து சௌதி புரோ லீக்கில் அல்-ஹிலால் அணியில் சேர்ந்தார். மெஸ்ஸி, ரொனால்டோ புகழ்பெற்ற காலத்தில் தனியாளாக இவ்வளவு புகழ்பெறுவது சாதாரண மில்லை. அதனால்தான் நெய்மர் ரசிகர்கள் அவரை உதைபந்தின் இளவரசன் என்கிறார்கள். காயம் காரணமாக அவரால் தொடர்ச்சியாக விளையாட முடியாமல் போனது துரதிர்ஷ்டமாகும்.

2017இல் நெய்மருக்கு 200 மில்லியன் டொலர் சம்பளமாக பி.எஸ்.ஜி. அளித்ததாக தகவல்கள் வெளியாகியன. ஆனால், தொடர்ச்சியாக காயம் காரணமாக அவரது சந்தை மதிப்பு வெகுவாக குறைந்ததும் குறிப்பிடத்தக்கது. ஒரு சீசனில் விளையாட நெய்மருக்கு 130 மில்லியன் டொலர் அளிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி முதல் நெய்மரை மாற்றுவதற்கான காலம் தொடங்கியது. இரு அணிகளுக்கும் சம்பளம் தொடர்பான ஒப்புதல் ஏற்பட்டுவிட்டால் அல்- ஹிலாலிருந்து நெய்மர் வெளியேறலாம். நெய்மர் மொத்தமாக தனது உதைபந்து வாழ்க்கையில் 717 போட்டிகளில் 439 கோல்கள் அடித்துள்ளார். 279 முறை கோல்கள் அடிக்கவும் உதவியுள்ளார்.







மருதமுனை பென்சின் விளையாட்டுக் கழகத்தின் 13ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தேசிய நீர் வடிகாலமைப்பு சபையின் மானி வாசிப்பாளரும் கழகத்தின் பொருளாளருமான யூ.ஏ.எம்.ஜரீத்தின் பூரண பங்களிப்பில் கழகத்துக்கான 8ஆவது மேலங்கி வழங்கி வைக்கப்பட்டது. கழகத்தின் தலைவர் ஏ.பி.எம்.றனூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மருதமுனை ஷறாபத் மீன் விற்பனை, பதனிடுதல் மற்றும் சந்தைப்படுத்தல் நிலையத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் கழகத்தின் தவிசாளருமான வி.எம்.முஹம்மட் றியாஸ் கலந்து கொண்டிருந்தார். (படங்கள் - மருதமுனை செய்தியாளர்)

# கண்டியில் குரங்குகளை வெளியேற்ற நடவடிக்கை

ஜே.எம்.ஹாபீஸ்



கண்டி மாவட்டத்தில் வருடமொன்றுக்கு 30 பில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தும் குரங்குகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று (15) தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் பல்வேறு உற்பத்திகள் குரங்குகளால் சேதமாக்கப்பட்டுவருவதாகவும் இதனால் கண்டி மாவட்டத்தில் மாத்திரம் வருடமொன்றுக்கு 30 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

காணி, விவசாய நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த தலைமையில் இடம்பெற்ற கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

குரங்குகளைப் பிடித்து அவற்றை மலடாக்கி ரன்தெம்பே நீர்த்தேக்கப் பகுதியிலுள்ள தீவுகளில் விடுவதுடன் அவை மீண்டும் விவசாயக் காணிகளுக்கு வரமுடியாத வகையில் மின் வேலிகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக 300 குரங்குகளை இவ்வாறு மலடாக்கி மேற்படி நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதிகளிலுள்ள தீவுப் பகுதியில் இவ்வாறு கைவிடத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவர்ண ,

''மனிதாபிமான அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், பலரது ஜீவனோபாயம் விவசாயத்திலேயே தங்கியுள்ளது. அதேநேரம், விவசாய உற்பத்திகள் மனித வாழ்வுக்கு இன்றியமையாதவை. எனவே, மனித வாழ்வு மிக முக்கியம்'' - என்றார்.

# மலையகத்தில் கன மழை

## பல்வேறு இடங்களில் மண்சரிவு அபாயம்!

## இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை

எம்.ஏ.எம்.ஹசனார்

மலையகத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக பல்வேறு இடங்களில் மண் சரிவும் அங்காங்கு வீதி தாழிறக்கமும் ஏற்பட்டு வருவதாக இடர் முகாமைத்துவ மையம் தெரிவிக்கின்றது.

மேலும், எல்ல - வெல்லவாய வீதி, பதுளை - மஹியங்கனை வீதி, வெலிமடை - நுவரெலியா வீதி, ஹாலி எல - வெலிமடை வீதி, பண்டாரவளை- பதுளை வீதி போன்ற வீதிகளில் பல்வேறு இடங்களில் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்படலாமென இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இவ்வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் மிக அவதானமாகப் பயணிக்குமாறு போக்குவரத்துப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதேபோன்று நேற்று முன்தினம் (14) வெலிமடைப் பிரதேசத்தில் பெய்த அடை மழை காரணமாக பண்டாரவளை - வெலிமடை வீதியில் தம்பவின்னை பிரதேசத்தில் மண்மேடு சரிந்து விழுந்ததில் வீடொன்று முற்றாக சேதமாகியுள்ளது.இந்நிலையில் அங்கிருந்தவர்கள் வீட்டிலிருந்து வெளியேறியதால் எவருக்கும் எந்தவித காயங்களோ உயிர்ச் சேதமோ ஏற்படவில்லையெனத் தெரியவந்துள்ளது.





அதேவேளை, பாடசாலை செல்லும் மாணவர்களின் பாடப் புத்தகங்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் அனைத்தும் மண் மேட்டில் புதைந்துள்ளதாக வெலிமடை இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# வீண் செலவுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை அரசாங்கத்தால் முன்னெடுப்பு

யடவத்த செய்தியாளர்

'' வீண் செலவுகளை அரசாங்கம் தற்போது கட்டுப்படுத்தி வருகின்றது. இதனூடாக கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு குறைந்த வருமானம் பெறும் சமூகங்களை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது'' - என மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசாரப் பிரதியமைச்சருமான கமகெதர திசாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை ,நிக்கொள்ள கிராமத்தில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

''குறைந்த வருமானம் பெறும் சமூகங்களை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தினூடாக கிடைக்கும் வருமானத்தினால் அஸ்வெசும திட்டத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ள குடும்பங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதாந்தம் 6,000 ரூபாவை வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு அதிகளவில் வழங்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் வாகனங்கள் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளன. இதனால் பெருமளவு செலவும் குறைந்துள்ளதால் இவ்வாறன வீண் செலவுகளை அரசாங்கம் கட்டுப்படுத்தி அதன் நன்மைகளை இந்நாட்டு மக்களுக்கே வழங்கி வருகின்றது.

அரசாங்கம் இந்நாட்டைப் பொறுப்பேற்று குறுகிய காலத்துக்குள் நல்ல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. சமூகங்களுக்கிடையே இனவாதத்துக்கு இடமில்லை. அதைப்போல் நாட்டில் ஊழல் மோசடிக்கும் ஒருபோதும் அரசாங்கம் இடமளிக்காது. இவ்வாறான நல்ல திட்டங்களை அரசு முன்னெடுத்துச் செல்லும்போது சில அரசியல்வாதிகள் இதற்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்''.

கடந்த பொதுத் தேர்தலில் அதிகப்படியான வாக்குகளை அளித்து மாத்தளை மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்துக்கு தன்னை அனுப்பி வைத்த அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

# தனமன்வில விபத்தில் இளைஞன் உயிரிழப்பு





எம்.ஏ.எம்.ஹசனார்,ஏ.ஏ.எம்.பாயிஸ்

வெல்லவாய - தனமன்வில பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் ஸ்தலத்தில் உயிரிழந்ததாக தனமன்வில பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லவாய - தனமல்வில பிரதான வீதியில் எம்பிலிபிட்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் (14) தனியார் பஸ்ஸுடன் எதிர்த்திசையில் சென்ற மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 20 வயதுடைய இளைஞரெனவும் தனமல்வில, கிரிபங்கார பிரதேசத்தைச் சேர்ந்தவரெனவும் தெரிவித்த பொலிஸார் குறித்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தைப்பொங்கலுக்கே தேவையான அரிசியை வழங்க முடியாத அரசு

## ரோகினி கவிரத்ன எம்.பி. குற்றச்சாட்டு

ஜே.எம்.ஹாபீஸ்



தைப்பொங்கலுக்கே தேவையான அரிசியை வழங்க முடியாத அரசு தடுமாற்றமடைந்துள்ளதாக மாத்தளை மாவட்ட ஐ.ம.கூ. பாராளுமன்ற உறுப்பினர் ரோகினி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றைய தினம்(15) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

''அரிசிப் பிரச்சினைக்கு சரியான தீர்வை முன்வைக்க முடியாத அரசு தற்போது வெவ்வேறு காரணங்களைக் கூறிக்கொண்டுள்ளது. முன்னைய ஆட்சியின் போது ஒருவருக்கு 20 கிலோ வீதம் இலவசமாக சிவப்பு நாட்டரிசி வழங்கியதால்தான் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்பது சிறுபிள்ளைத் தனமான பதிலாகும்.

உணவுக் கொள்கைத் திட்டமிடல் சபை இதுவரை கூடவில்லை. இதிலிருந்து அவர்கள் நாட்டு மக்களது உணவு விடயத்தில் எந்தளவு அக்கறை காட்டி வருகின்றனர் என்பதை உணர முடிந்துள்ளது.

கடந்த காலத்தில் 46 இலட்சம் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டு அதிலிருந்து 29 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி பெறப்பட்டுள்ளது. அதில் நான்கில் ஒரு பங்கு பச்சையரிசியாகும். எனவே, பச்சை யரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படவாய்ப்பில்லை. இது அரசின் முறையற்ற அரிசி முகாமையே என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் இடம்பெற்ற இரண்டாம் மொழி கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு









தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (NILET) ZOOM தொழில்நுட்பமூடாக வடக்கு, கிழக்கு மற்றும் மேல் மாகாணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்காக மேற்கொண்ட 100 மணித்தியாலம் மற்றும் 150 மணித்தியால இரண்டாம் மொழி பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்த அரச உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கலை நிகழ்வும் மன்னார் நகர சபை கலாசார மண்டபத்தில் ஆசிரியையும் சிரேஷ்ட இரண்டாம் மொழிப்பாட தேசிய மட்ட வளவாளருமான திருமதி இந்துனில் சாகரிக்கா பிகிறாடோ தலைமையில் இடம்பெற்றன.

2020ஆம் ஆண்டு அரசகரும மொழி அமைச்சால் வெளியிடப்பட்ட 18ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைவாக அரச உத்தியோத்தர்களின் மொழிப் புலமையை விருத்திசெய்யும் முகமாக மேற்கொள்ளப்பட்ட பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்த பயிலுனர்கள் 175 பேருக்கு மேற்படி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (NILET) கல்வி மற்றும் ஆய்வு அதிகாரி திருமதி பாலரஞ்சனி காந்தீபன், தேசிய இணைப்பாளர் டிலான் ரணசிங்க, தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (NILET) மத்திய மாகாண இணைப்பாளர் மீர அத்தப்பத்து, மன்னார் மாவட்ட மொழி இணைப்பாளர் திருமதி சிந்துஜா சில்வா, இரண்டாம் மொழிபாட வளவாளர்களாகிய ஈ.எஸ்.கே.ரோச், செல்வி சுபாஜினி விநாயகமூர்த்தி, திருமதி வீ.சர்மினி ஆகியோர் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த நிகழ்வில் இரண்டாம் மொழி சிங்கள கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்த பயிலுனர்களால் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டு இடம்பெற்றன.

அதேநேரம், புதிய இரண்டாம் மொழி சிங்கள பாடநெறியானது (Zoom தொழில்நுட்பம் மற்றும் நேரடி வகுப்பு) ஆரம்பிக்க உள்ள நிலையில் பயிற்சி நெறியைத் தொடர விரும்புவோர் 0776355521 எனும் இலக்க இரண்டாம் மொழி வளவாளர் திருமதி இந்துனில் சாகரிக்காவுடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி திருமலையில்

சிவகுமார் திவியா

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது.

திருகோணமலையிலுள்ள சிவில் அமைப்பொன்றின் கேட்போர் கூடத்தில் குறித்த தினமன்று காலை பத்து மணிக்கு கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது கட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய பார்வை, மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மாநாடு உள்ளிட்ட விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதோடு, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னெடுத்துவரும் புதிய அரசியலமைப்பு விடயத்தைத் தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கையாளுதல் விடயத்தில் தமிழரசுக் கட்சியின் வகிபாகம் தொடர்பிலும் தீர்மானம் எடுக்கப்படலாமென்று அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# யாழ். நாகர்கோவில் பகுதியில் கரையொதுங்கிய மர்ம வீடு!

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் மர்ம வீடொன்று கரையொதுங்கியுள்ளது.



அண்மைக்காலமாக கடல் நிலையில் ஏற்பட்ட மாற்றங்களால் கடல் சீற்றங்கள், சூறாவளி, புயல், நிலநடுக்கம் போன்றவை பல தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்டன.

இதன்போது இந்த வீடானது மியன்மார், தாய்வான், தாய்லாந்து, மலேஷியா, இந்தியா போன்ற ஏதாவதொரு நாட்டிலிருந்து வந்திருக்கலாமென நம்பப்படுகிறது.

குறித்த வீட்டில் பௌத்த மதத்தைத் தாங்கிய பல மரபு அம்சங்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது. குறித்த வீட்டைப் பார்வையிடுவதற்கு அதிகளவான மக்கள் சென்றவண்ணமுள்ளனர்.

# யாழ். மாவட்ட செயலகத்தில் வருடாந்த தைப்பொங்கல் நிகழ்வு









பு.கஜிந்தன்

யாழ்ப்பாண மாவட்டச் செயலக வருடாந்த தைப்பொங்கல் நிகழ்வு நேற்று (15) காலை 08.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலக முன்றிலில் மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி)க.ஸ்ரீமோகனன் உள்ளிட்ட மாவட்ட செயலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் தைப்பொங்கல் கொண்டாட்டம்!





வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் பக்திப் பாடல்கள் இசைக்க மழைக்கு மத்தியிலும் தைப்பொங்கல் திருநாள் சிறப்பாக நேற்று முன்தினம் (14) கொண்டாடப்பட்டது.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய மக்கள் பிரிவின் ஏற்பாட்டில் சிவில் பாதுகாப்புக் குழுவினரின் பங்களிப்புடன் சிறப்பான முறையில் புதுப்பானையில் புத்தரிசிப் பொங்கல் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ண, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் வவுனியா பிரதேசங்களைச் சேர்ந்த சமுதாய பாதுகாப்புப் பிரிவின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பருத்தித்துறையில் சாராயம் -பியர் விற்பனை நிலையங்கள் முற்றுகை

சாவகச்சேரி நிருபர்

பருத்தித்துறைப் பகுதியில் நீண்ட காலமாக சட்டவிரோதமாக இயங்கி வந்த சாராய மற்றும் பியர் விற்பனை நிலையங்கள் மூன்று கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரால் முற்றுகையிடப்பட்டது.

மாகாண உதவி மதுவரி ஆணையாளர் எஸ்.ரஞ்சனின் ஆலோசனைக்கமைவாக யாழ். மாவட்ட மதுவரி அத்தியட்சகர் ரணவீரவின் அறிவுறுத்தலின் பேரில் பருத்தித்துறை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ரசிகரன் தலைமையிலான குழுவினரே பருத்தித்துறை- கரணவாய் பகுதிகளில் மூன்று வெவ்வேறு இடங்களில் மேற்படி முற்றுகை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். இதன்போது சட்டவிரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சாராயம் மற்றும் பியர் ஆகியன மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி இரணைமடு குளத்தின் அனைத்து வான்கதவுகளும் திறப்பு

பு.கஜிந்தன்

தற்போது பெய்து வருகின்ற கனமழையால் இரணைமடு குளத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

அதாவது குளத்தின் நீர்மட்டம் 36 அடி 10.5 அங்குலத்தைத் தாண்டியுள்ளது. இதனால் குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியிடப்படுகின்றது.

எனவே, குளத்தின் கீழ்ப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகின்றமையால் மாவட்டத்திலுள்ள சிறு குளங்களான கனகாம்பிகைக் குளம், வன்னேரி குளம், பிறமந்தனாறு குளம் ஆகியன வான் பாய ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இராணுவச் சட்டத்தை அமுல்படுத்திய விவகாரம்:

# தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் கைது



இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தி மீளப்பெற்ற விவகாரத்தில் பதவிநீக்கம் செய்யப்பட்ட தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதை அந்த நாட்டின் ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் உறுதிசெய்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகை வளாகத்துக்கு முன்பாக மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் நேற்று (15) அதிகாலையில் குவிந்திருந்த நிலையில், அவர் கைதுசெய்யப்பட்டார். கறுப்பு நிற எஸ்யூவி வாகனங்கள் சைரனை ஒலிக்க எழுப்பியபடி ஜனாதிபதி மாளிகை வளாகத்தை விட்டு வெளியேறின.

கிழக்காசிய நாடான தென் கொரியாவில், அடுத்த நிதியாண்டுக்கான பட்ஜெட் மசோதா தொடர்பாக ஆளும் மக்கள் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து, அந்நாட்டின் ஜனாதிபதி யூன் சுக் இயோல் (வயது 63), அவசரநிலை இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தினார். இதற்கு எதிர்க்கட்சிகளும் ஆளுங்கட்சியில் சில எம்.பிக்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால், சில மணிநேரங்களில் அவசரநிலை அறிவிப்பை யூன் சுக் இயோல் திரும்பப் பெற்றார். இதற்கிடையே, இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்த யூன் சுக் இயோலை பதவிநீக்க வலியுறுத்தி, அந்நாட்டு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தீர்மானம் வெற்றிபெற்றது; இதையடுத்து, அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவரது அதிகாரங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன. இயோலுக்கு தென்கொரிய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

தென்கொரிய புலனாய்வு அதிகாரிகள் கடந்த 03ஆம் திகதி, பதவி நீக்கப்பட்ட தென்கொரியா ஜனாதிபதி இயோலின் வீட்டுக்குச் சென்றபோது ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகள் அதைத் தடுத்தனர். இதனால் அதிகாரிகளின் கைது முயற்சி தோல்வியடைந்தது.

இந்நிலையில் நேற்று (ஜன., 15) சிறப்புப் புலனாய்வு அதிகாரிகள் யூன் சுக் இயோல் வீட்டுக்குச் சென்றபோது, இதனையறிந்த அவரது ஆதரவாளர்கள் வீட்டுக்கு முன் சூழ்ந்தனர். இரு தரப்பினருக்குமிடையில் கடுமையான வாக்குவாதம் மோதல் ஏற்பட்டது. கைது முயற்சியை தடுத்து நிறுத்த முயற்சித்தனர். இதையடுத்து நீண்ட நேரத்துக்குப் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டார். தொடர்ந்து 48 மணிநேரம் அதிகாரிகள் கண்காணிப்பில், யூன் சுக் இயோல் இருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் முன் ஆட்சி முற்றிலும் சரிந்துவிட்டதென கைதுசெய்யப்படுவதற்கு முன்னர், யூன் சுக் இயோல் பதிவிட்ட வீடியோவில் குறிப்பிட்டுள்ளார்.



பட்டிப்பொங்கலை முன்னிட்டு உலகப் புகழ்பெற்ற தஞ்சாவூர் பெரியகோவிலிலுள்ள பெருவுடையாருக்கேற்ற பெருநந்திக்கு இரண்டாயிரம் கிலோ காய்கறிகள், பழ வகைகள், இனிப்புகளால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது.

## “சுவாமியே சரணம் ஐயப்பா...”

# பொன்னம்பலமேட்டில் மகர ஜோதியாக காட்சியளித்த சுவாமி ஐயப்பன்



“சுவாமியே சரணம் ஐயப்பா..” என்ற பக்தர்களின் சரண கோஷம் விண்ணைப் பிளக்க நேற்றுமுன்தினம் (14) பொன்னம்பலமேட்டில் மகரஜோதியாகக் காட்சியளித்தார் சுவாமி ஐயப்பன். இந்த அற்புத நிகழ்வை உலகெங்கிலுமிருந்து வருகை தந்து சபரிமலையில் குழுமியிருந்த ஐயப்ப பக்தர்கள் கண்டு பரவசமடைந்தனர்.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் மகர விளக்கை முன்னிட்டு கடந்த மாதம் நடை திறக்கப்பட்டது. தினசரி சுவாமி ஐயப்பனுக்கு நெய் அபிஷேகம், புஷ்பாபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்புப் பூஜைகள், வழிபாடுகள் நடைபெற்று வந்தன.

இந்நிலையில், மகர ஜோதி தரிசனத்துக்காக ஐயப்பன் விக்கிரகத்தில் அணிவிக்கும் ஆபரணங்கள் பந்தளம் அரண்மனையிலிருந்து கொண்டுவரப்பட்டது. திங்களன்று (13) அதிகாலை, 5 மணி முதல் பந்தளம் வலியக்கோயிக்கல் சாஸ்தா கோவிலில் பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது. பின்னர் திருவாபரண பவனி புறப்படுவதற்கான ஏற்பாடுகள் தொடங்கின. பேழைகள் அடைக்கப்பட்டு கோவிலில் உச்ச பூஜை நடந்தது.

தொடர்ந்து தீபாராதனைக்குப் பின்னர் பந்தளம் ராஜ பிரதிநிதி ராஜராஜ வர்மாவுக்கு உடைவாள் வழங்கப்பட்டதும், திருவாபரண பேழைகள் கங்காதரன் குருசாமி குழுவினரின் தலையில் ஏற்றப்பட்டது. தொடர்ந்து கோவிலிலிருந்து திருவாபரண பேழைகள் வெளியே வந்தபோது, ஆகாயத்தில் கருடன் வட்டமிட்டது. பக்தர்களின் சரண கோஷம் விண்ணைத் தொடுமளவு எழுந்தது. தொடர்ந்து, திருவாபரண பவனி புறப்பட்டது.

மகரஜோதி பூஜைக்கு முன்னோடியாக நடைபெறும் சுத்தி கிரியைகள் சந்நிதானத்தில் தொடங்கியது. திங்கட்கிழமை மாலை தந்திரி கண்டரரு பிரம்மதத்தன் சுத்திகிரியை பூஜைகளை நடத்தினார். நேற்றுமுன்தினம் (14) மதியம் உச்ச பூஜைக்கு முன்னால் பிம்பசுத்தி பூஜைகள் நடைபெற்றன.

இதையொட்டி, எருமேலியில் அம்பலப்புழா மற்றும் ஆலங்காடு பக்தர்களின் பேட்டை துள்ளல் நடைபெற்றது. ஐயப்பனுக்கு அணிவிக்கப்படும் திருவாபரணங்கள் நேற்றுமுன்தினம் மாலை சந்நிதானத்தை வந்தடைந்தது. இந்த ஊர்வலத்துக்கு சரங்குத்தியில் தேவசம்போர்ட் சார்பில் பாரம்பரிய முறைப்படி வரவேற்பளிக்கப்பட்டது. தொடர்ந்து மகர விளக்கு பூஜைக்கு முன்னதாக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறக்கப்பட்ட நிலையில் மகரஜோதி ஏற்பட்டது.

இந்நிலையில், சபரிமலையில் மகரவிளக்கு பூஜையையொட்டி ஐயப்பனுக்கு திருவாபரணம் அணிவித்து, சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. இதனையடுத்து பொன்னம்மபல மேட்டில் மகர ஜோதியாக சுவாமி ஐயப்பன் பக்தர்களுக்கு 3 தடவைகள் காட்சியளித்தார்.

அப்போது இலட்சக்கணக்கான பக்தர்கள் “சுவாமியே சரணம் ஐயப்பா..” என்று விண்ணதிர சரண கோஷம் முழங்கினர். முன்னதாக பொன்னம்பலமேட்டில் தெரியும் மகரஜோதியை தரிசிக்க இலட்சக்கணக்கான பக்தர்கள் சபரிமலையில் குவிந்திருந்தனர்.

மகரஜோதியை முன்னிட்டு கூட்ட நெரிசலைத் தடுக்க இந்த ஆண்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. சபரிமலை பொன்னம்பலமேட்டில் மகரஜோதி காண சந்நிதானம் மற்றும் நிலக்கல், பம்பை, புல்லு மேடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இலட்சக்கணக்கான பக்தர்கள் காத்திருந்த நிலையில், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் தமிழ்மொழி மாதமாகிறது ஜனவரி

தமிழ்மொழி மற்றும் பாரம்பரிய மாதமாக ஜனவரியைக் கொண்டாட அமெரிக்க பாராளுமன்றத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வாழ் தமிழரான ராஜா கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் யோசனை முன்வைத்தனர். தமிழர் திருநாளான பொங்கல் நடைபெறுவதால் ஜனவரியை தமிழ்மொழி மற்றும் பாரம்பரிய மாதமாகக் கொண்டாட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## நைஜீரியாவில் விவசாயிகள் 40 பேர் சுட்டுக்கொலை

நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகளால் விவசாயிகள் 40 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

போர்னோ மாகாணத்திலுள்ள மோகுன்னே கிராமத்தில் விவசாயிகள் மீது தீவிரவாதிகள் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

விவசாயத்தில் நவீனமயமாதலைக்கொண்டு செயற்படும் விவசாயிகள் வசிக்கும் கிராமங்களில் புகுந்து கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது

## உக்ரைன் மீது ரஷ்யா அதிரடித் தாக்குதல்: முன்னெச்சரிக்கையாக மின் துண்டிப்பு!

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கிடையிலான போர் இன்று (16) 1,057ஆவது நாளாகவும் தொடரும் நிலையில், ரஷ்யப் படைகள் நேற்று (15) உக்ரைனின் மின் உற்பத்தி மையங்கள் மற்றும் எரிசக்தி சேமிப்பு மையங்களைக் குறிவைத்து மிகப்பெரியளவில் ஏவுகணைத் தாக்குதலை தொடங்கியது. இதனால் பல இடங்களில் முன்னெச்சரிக்கையாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை உக்ரைன் எரிசக்தித் துறை அமைச்சர் ஹெர்மன் ஹலுசென்கோ தெரிவித்துள்ளார். உக்ரைன் மக்களை ரஷ்யா தொடர்ந்து பயமுறுத்தி வருகிறது. மக்கள் பாதுகாப்பாக, அந்தந்த பகுதிகளிலுள்ள தங்குமிடங்களில் தங்கியிருக்க வேண்டுமென்றும், அரசாங்கத்தின் அதிகாரபூர்வ அறிவிப்புகளை அறிந்து அதனைப் பின்பற்றவேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கார்கிவ், சுமி, போல்டாவா, சபோரிஜியா, டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் மற்றும் கிரோவோஹ்ராட் ஆகிய பகுதிகளில் அரசு மின் நிறுவனமான உக்ரெனெர்கோ அவசரகால மின்வெட்டை அமுல்படுத்தியுள்ளது.

ரஷ்யாவால் ஏவப்பட்ட பல ஏவுகணைகளை உக்ரைனின் விமானப்படை கண்டறிந்து, மக்களுக்கு உரிய பாதுகாப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். தாக்குதலில் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக தகவல் எதுவும் வெளியாகவில்லை.



# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு: ஒருவர் பலி; 41 பேர் படுகாயம்

உலகப் புகழ்பெற்ற அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், இந்த ஜல்லிக்கட்டுப் போட்டியில் காளை குத்திக்கிழித்ததில் மாடுபிடி வீரரொருவர் உயிரிழந்துள்ளதுடன், 41 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், உலகப் புகழ்பெற்ற மதுரை பாலமேடு ஜல்லிக்கட்டு நேற்று (15) கோலாகலமாகத் தொடங்கியது. இதில் 1,000இற்கும் மேற்பட்ட காளைகளும் 900இற்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்களும் பங்கேற்றனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலகப் புகழ்பெற்றவை. இந்த ஆண்டு பொங்கலையொட்டி முதல் ஜல்லிக்கட்டுப் போட்டி தை முதல்நாளன்று மதுரை அவனியாபுரத்தில் நேற்றுமுன்தினம் (14)) சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

பெரும் எதிர்பார்ப்புகளுடன் அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டியில் அனைத்து சுற்றுப் போட்டிகளும் நடந்து முடிந்துள்ள நிலையில், இப்போட்டிகளில் பங்கேற்ற மாடுபிடி வீரரொருவர் காளை முட்டி உயிரிழந்துள்ளதுடன், 41 பேர் காயமடைந்தனர்.

அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டி 11 சுற்றுகளுடன் நிறைவு பெற்றது. இதில் திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த கார்த்தி 19 காளைகளை அடக்கி முதலிடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லொஸ்ஏஞ்சல்ஸ் காட்டுத் தீயில் சிக்கி 25 பேர் உயிரிழப்பு; 30 பேர் மாயம்



அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் ஏற்பட்ட காட்டுத் தீயால், தி பொலிசேட்ஸ் பகுதியில் 8 பேர் மற்றும் ஈட்டனில் 17 பேர் என மொத்தமாக 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

**தீயை அணைக்க தூவப்படும் ‘பிங்க் பொடி’**

இந்நிலையில், லொஸ்ஏஞ்சல்ஸ் கவுண்ட்டியில் காட்டுத் தீ பரவலைக் கட்டுப்படுத்த விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலம் ‘பிங்க் பொடி’ தூவி தீயை அணைக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்த வேதியியல் கலவையானது, பொருட்கள் மீது தூவப்படுவதால் அந்தப் பொருட்களில் தீ பற்ற நேர்ந்தால் அப்போது இந்த ‘பிங்க் பொடி’ காற்றிலிருக்கும் ஒட்சிசனை வேதியியல் மாற்றத்தால் தடுத்துவிடுவதால் தீ பற்ற வாய்ப்பில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே, காட்டுத் தீ பரவலைக் கட்டுப்படுத்த லொஸ்ஏஞ்சல்ஸில் பிங்க் பொடி தூவப்பட்டு வருகிறது.

தண்ணீரைக் காட்டிலும் இது நெடுநேரம் ஆவியாகாமல் இருப்பதால், தீயணைக்கும் பணியில் பரவலாக இந்த பிங்க் பொடி பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் இன்று 09 நாளாகவும் பற்றியெரிந்து வரும் காட்டுத் தீயில் சிக்கி 25 பேர் உயிரிழந்துள்ளனர். 30 பேர் காணாமல் போயுள்ளனர். 12 ஆயிரம் கட்டடங்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளன. மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசி வருகிறது. இதனால், காட்டுத் தீயின் தீவிரம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7